20th JULY 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 114 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

## சவூதி தூதரகத்துக்கு பதில் தூதுவர் நியமனம்

கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தின் பதில் தூதுவராக தூதரகப் பொறுப்பதிகாரி யாஸீர் அப்துர்ரஹ்மான் அல் ஹாசிமி நியமிக்கப்பட்டுள்ளார். சவூதி அரேபிய தூதுவராக பணிபுரிந்த காலித் ஹமூத் அல் கஹ்தானி தனது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் ரியாத் பயணமானார்.




# ஆர்ஜென்டினாவை அடக்கி உலகை வென்றது ஸ்பெயின்



வெற்றியை சுஜ்திட்டுக் கொண்டாடிய யமால்





கண்ணீர் சிந்திய மெஸ்ஸி

(அரபாத் முஹம்மட்)

முழுமையான செய்திக்கு, 03ம் பக்கம்பார்க்க...

# முழு அளவிலான போர் மூளும் அபாயம்

## தரைப் படைத் தாக்குதல்களுக்கு இரு தரப்பும் ஆயத்தம் குவைத் பஹ்ரைன் நாடுகள் கடும் அச்சத்தில்

(விஷேட செய்தியாளர் – எம்.என்.முஹம்மட்)

ஈரானிய யுத்தம் மிகவும் பயங்கரமானதொரு கட்டத்தை அடைந்துள்ளது. ஈரானும் அமெரிக்காவும் செய்து கொண்ட உடன்பாட்டை ஈரானும் அமெரிக்காவும் பரஸ்பரம் ரத்துச் செய்துள்ளது. முழு அளவிலான போர் இதுவரை ஆரம்பிக்கா விட்டாலும் தொடரான தாக்குதல்கள் இரு நாடுகளும் நடத்தி வருகின்றன. இரண்டு நாடுகளின் தாக்குதல்களில் இராணுவ இலக்குகளே பெரும்பாலும் இலக்கு வைக்கப்படுகின்றன.

ஈரான் தெளிவாக அறிவித்துள்ளதாவது. பொதுமக்கள் குடியிருப்புகள் மீது அல்லது சக்தி வலு நிலையங்கள் மீது அல்லது குடிநீர் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துமாக இருந்தால் மொத்த மத்திய கிழக்கில் உள்ள சகல இலக்குகளும் தாக்கப்படும். குறிப்பாக அமெரிக்காவினுடைய சகல இலக்குகளும் தாக்கப்பட்டு அழிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளதால் அமெரிக்கா இயன்றவரை

02ம் பக்கம்பார்க்க...

## சிறைச்சாலை பிரச்சினைகளுக்குத் தீர்வு; ஜனாதிபதி தலைமையில் அவசர கூட்டம்



சிறைச்சாலை கட்டமைப்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஜனாதிபதியின் தலைமையில் சிறைச்சாலை கட்டமைப்பில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றைத்

02ம் பக்கம்பார்க்க...

## நிதி ஆணைக்குழுவின் புதிய தலைவியாக றிஸானா அனீஸ் நியமனம்








நிதி ஆணைக்குழுவின் புதிய தலைவரும் உறுப்பினர்களும் நியமனம்

நிதி ஆணைக்குழுவின்

02ம் பக்கம்பார்க்க...



# கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் புதிய தவிசாளராக எம்.பீ.எம். பிர்தௌஸ் நளீமி நியமனம்



கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் புதிய தவிசாளராக, காத்தான்குடியைச் சேர்ந்த எம்.பீ.எம். பிர்தௌஸ் நளீமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர இன்று (20.07.2026) இந்நியமனத்தை வழங்கி வைத்தார்.

நியமனத்தைத் தொடர்ந்து, திருகோணமலை நகரில் அமைந்துள்ள வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைமையகத்திற்கு விஜயம் செய்த புதிய தவிசாளர், தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வின் போது அதிகார சபையின் உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்ததுடன், மாகாணத்தின் போக்குவரத்து நிலவரங்கள் குறித்த முதற்கட்ட கலந்துரையாடலும் இடம்பெற்றது.

பதவியேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த புதிய தவிசாளர் எம்.பீ.எம். பிர்தௌஸ் நளீமி: "கிழக்கு மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து சேவைகளை மேலும் வினைத்திறனானதாகவும், மக்களுக்கு அசௌகரியங்களற்ற பாதுகாப்புமிக்க சேவையாகவும் மேம்படுத்துவதற்குத் தேவையான புதிய திட்டங்களை அர்ப்பணிப்புடன் நடைமுறைப்படுத்துவேன்." என்றார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் காத்தான்குடி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளராகவும், சுற்றாடல் அமைச்சின் மாவட்ட இணைப்பாளராகவும் பணியாற்றி வரும் பிர்தௌஸ் நளீமி அவர்கள், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முதன்மைப் பங்காற்றி வந்த நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் இன்று (20) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில், இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பாக அவர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கருத்துகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், சிறைச்சாலை வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் அதற்காக எடுக்கக்கூடிய மாற்று நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நானாயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்தா, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் அயேஷா ஜினசேன, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## முழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் இலக்குகள் மீதான தாக்குதலைத் தவிர்ந்து வந்தாலும் ஒரு புற்றுநோய் வைத்தியசாலையையும் ஒரு சந்தையின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

தற்பொழுது ஈரான் சுற்றியுள்ள சகல அரபு நாடுகள் மீதிலும் உள்ள அமெரிக்க இலக்குகளைத் தொடராக தாக்கி வருகின்றது. குறிப்பாக குவைத், பஹ்ரைன், ஜோர்தான் போன்ற நாடுகளில் உள்ள இலக்குகள் பலமான தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதுடன் நேற்று ஜோர்தானின் மீது நடைபெற்ற தாக்குதலில் பல அமெரிக்கத் துருப்புக்கள் கொல்லப்பட்டும் பலர் படுகாயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சில தகவல்களின்படி அமெரிக்கா தனது படைப்பிரிவுகளை ஜோர்தானிலிருந்து அகற்றுவதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன. பஹ்ரைனிலும் குவைத்திலும் உள்ள பல அமெரிக்க நிலையங்கள் முழுமையாக தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் பல உத்தியோகபற்றற்ற செய்திகள் தெரிவித்தாலும்அந்த செய்திகளை இதுவரை அமெரிக்கத் தரப்பு உறுதி செய்யவில்லை. ஆனால், பெரும்பாலான இடங்களில் பரவலாக பாதிப்பு ஏற்பட்டு இருப்பதை அமெரிக்கா ஒத்துக் கொண்டுள்ளது.

இஸ்ரேலிய உளவுத்துறை ஈரானிய தலைமையை எந்த நேரமும் தன்மீது தாக்குதல் நடத்துவதற்கு உத்தரவிடலாம் என்றும் அவ்வாறானதொரு தாக்குதல் நடத்தப்படுமாக இருந்தால் தாம் முழு வீற்றுடன் ஈரான் மீதும் தாக்குதல் நடத்துவதாகவும் பலமானதொரு யுத்தத்தை தொடங்கி விடுவதாகவும் இஸ்ரேல் கடுமையாக எச்சரித்துள்ளது. இதுவரை ஈரான் - இஸ்ரேல் மீது இந்த புது தாக்குதல் ஆரம்பித்ததில் இருந்து தாக்குதல் நடத்தாவிட்டாலும் ஹிஸ்புல்லா இலக்குகள் மீதும் தென் லெபனான் மீதும் இஸ்ரேல் காஸா மீதும் தொடராக தாக்குதல் நடத்தி வருகின்றன. எந்த நேரமும் இந்த நிலைமை மாறி இஸ்ரேலும் இந்த யுத்தத்தில் சம்பந்தப்படுமாக இருந்தால் அது பலமான யுத்த நிலைமை உருவாகும் என எச்சரிக்கப்படுகிறது. இதே வேளை இஸ்ரேலிய பிரதமர் துருக்கி, எகிப்து போன்ற நாடுகளில் கூட்டிணைந்த ஒரு தாக்குதலை இஸ்ரேல் மீது நடத்தலாம் என்ற எச்சரிக்கையை விடுத்துள்ளது மிகவும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் உட்பட பல அரபு நாடுகள் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள முயற்சி செய்தாலும் ஈரான் மிகவும் தெளிவாக இருக்கிறது. உடன்பாடுகளில் உண்மையாக இருங்கள் இல்லாவிட்டால் நீங்கள் போரைச் சந்தியுங்கள் என்ற நிலைப்பாட்டில் ஈரான் மிகவும் உறுதியாக உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானை குறைத்து மதிப்பிட்டு விட்டதாக சில அமெரிக்க அரசியல் ஆலோசகர்கள், இராணுவ ஆலோசனைக் குழுவும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலைமையில் அமெரிக்காவுக்கு இந்த தாக்குதலைத் தொடருமாக இருந்தால் பிராந்திய அளவில் மிகப் பழமையான ஒரு பொருளாதார நெருக்கடி உருவாவதற்கான வாய்ப்பு காணப்படுவதோடு, இந்த யுத்தம் படிப்படியாக இந்து சமுத்திரம் வரை பரவும் ஆபத்து இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. ஈரான் அண்மையில் இந்து சமுத்திரத்தில் பயணித்த ஒரு சரக்குக் கப்பல் மீது தாக்குதல் நடத்தியமை கூர்ந்து கவனிக்கத்தக்கது.

ஈரான் பல ஆளில்லாத விமானங்களை சுட்டு வீழ்த்தி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. யுத்தம் மிகவும் உக்கிரமான நிலையில் ஈரான் தனது ஏவுகணைத் திட்டங்களை மேம்படுத்தி உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட இலக்குகளை அமெரிக்கா எதிர் கொள்வது மிகவும் சிரமமாக இருப்பதாகவும் வேறு ஏதாவது நாடு இதற்கு உதவி செய்திருக்கும் என்ற சந்தேகத்தையும் அமெரிக்கா வெளியிட்டு இருக்கிறது.

யுத்தம் இன்னும் 48 - 72 மணித்தியாலங்களுக்குள் ஏதாவது முயற்சி செய்து தற்காலிகமாக நிறுத்தப்படாவிட்டால் கட்டுக்கடங்காத ஒரு பெரிய யுத்தமாக மாறுவதற்கான வாய்ப்பு இருப்பதோடு, அமெரிக்காவின் மத்திய கிழக்கில் உள்ள 50,000 படைவீரர்களும் ஒரு தரைப்படைத் தாக்குதலுக்குத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர். ஈரானும் தனது சகல எல்லைகளிலும் மிகவும் பலமான தரைப்படை ஏற்பாட்டைச் செய்திருப்பதோடு, அவ்வாறானதொரு தரைப்படைத் தாக்குதல் நடைபெறுமாக இருந்தால் குவைத், பஹ்ரைன் போன்ற நாடுகளை ஈரான் தம்வசப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் நிறையக் காணப்படுகின்றன.

## நிதி...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய தலைவராகவும் உறுப்பினராகவும் திருமதி என். ஆர். அனீஸ் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் ஏனைய உறுப்பினர்களாக ஜே. எம். சி. ஜே. விஜேதுங்க மற்றும் கே. கருணாகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இன்று (20) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து அவர்களிடம் வழங்கி வைத்தார்.

நிதி ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்காகவே இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## ஆர்ஜென்டினாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2026 பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரின் தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான ஆர்ஜென்டினாவுக்கு எதிராக மேலதீக நேரமான 106ஆவது நிமிடத்தில் பெர்ரான் டோரஸ் அடித்துக் கொடுத்த கோலின் உதவியுடன் 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஸ்பெயின் அணி இரண்டாவது முறையாகவும் பிபா உலகக்கிண்ணத்தை உச்சி முகர்ந்து அசத்தியது.

### ஸ்பெயினின் ஆதிக்கத்துடன் இடம்பெற்ற இறுதிப் போட்டி

உலக கால்பந்தாட்ட வரலாற்றில் முதல் முறையாக 3 நாடுகள் இணைந்து நடாத்திய , முதல் முறையாக 48 அணிகள் பங்கேற்ற பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரின் விறுவிறுப்பான இறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியனான ஆர்ஜென்டினா அணியும் முன்னாள் சம்பியனான ஸ்பெயின் அணியும் தகுதி பெற்றிருந்தன.

உலகமே ஆவளுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த தீர்க்கமான இறுதிப் போட்டி இலங்கை நேரப்படி 20ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 12.30 மணிக்கு அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள நியூஜெர்சி மைதானத்தில் நடைபெற்றது. பல ஆயிரம் ரசிகர்கள் மைதானத்தில் புடைசூழ, உலகின் நாளாப் புறங்களிலும் உள்ள கோடிக்கணக்கான கால்பந்தாட்ட ரசிகர்கள் நேரலையில் பார்த்திருக்க ஆரம்பித்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இருப்பினும் இரு அணிகளின் தடுப்பு வீரர்களும் கோல் நுழையாத வண்ணம் காத்துநின்றனர். இதனால் முதல் பாதி ஆட்டம் கோலின்றி சமநிலை பெற்றது.

பின்னர் ஆரம்பித்த தீர்மானமிக்க 2 ஆவது பாதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர்கள் ஆர்ஜென்டினா கொல் கம்பத்தை முழுமையாக முற்றுகையிட்டனர்.

இருப்பினும் ஆர்ஜென்டினா கோல்காப்பாளரின் அசத்தலான செயற்பாட்டினால் ஸ்பெயின் அணியால் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியவில்லை. இப் பாதி ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணியின் வீரர்களால் ஸ்பெயினின் கோல் கம்பம் நோக்கி பந்தினைக் கொண்டு செல்ல முடியாத அளவிற்கு ஸ்பெயின் அணி வீரர்கள் ஆட்டத்தில் ஆக்ரோஷம் காட்டினர்.

இவ்வாறு ஸ்பெயினின் முழுமையான ஆதிக்கத்துடன் இடம்பெற்ற 2ஆவது பாதியிலும் இரு அணிகளும் கோலினை அடிக்காமல் போக ஆட்டத்தின் 93ஆவது நிமிடத்தில் வைத்து ஆர்ஜென்டினா அணியின் மத்திய கள வீரரான பெர்னாண்டஸ் 2ஆவது மஞ்சல் அட்டையைப் பெற்றமையால் சிகப்பு அட்டை காண்பிக்கப்பட்டு மைதானத்திலிருந்தே வெளியேற்றப்பட ஆர்ஜென்டினா 10 வீரர்களுடன் பங்கேற்க முழு நேர ஆட்டம் கோலின்றி சமநிலை பெற்றமையால் வெற்றியாளரை தீர்மானிக்க மேலதீக நேரம் வழங்கப்பட்டது.

இந்த மேலதீக நேரத்திலும் ஸ்பெயின் அணியின் ஆதிக்கம் மேலோங்கியது. இருப்பினும் மேலதீக நேரத்தின் முதல் பாதியும் கோல் இன்றி முடிய, மேலதீக நேரத்தின் 2ஆவது பாதி ஆரம்பித்த அடுத்த நிமிடமான ஆட்டத்தின் 106 ஆவது நிமிடத்தில் வைத்து ஸ்பெயினின் பெர்ரான் டோரஸ் தனது வைக்காலால் ஆர்ஜென்டினா கோல் கம்பத்தை நோக்கி அடித்த பந்து எந்தவித தடைகளும் இன்றி கம்பம் நுழைய தன் கோல் கணக்கை ஸ்பெயின் அணி ஆரம்பித்தது.

பின்னர் மீதமாக இருந்த 14 நிமிடங்களில் ஆர்ஜென்டினா சமநிலை கோலை அடிக்க தீவிரமாக முயன்ற போதிலும், ஸ்பெயின் பாதுகாப்பு வரிசை உறுதியாக செயல்பட்ட போட்டியின் முழு நேரம் முடிவுற்றதாக நடுவர் அறிவிக்க நடப்புச் சம்பியனான ஆர்ஜென்டினா அணியை 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தி பிபா உலகக் கிண்ணத்தை 2ஆவது முறையாகவும் தனதாக்கி அசத்தியது ஸ்பெயின் அணி.

மேலும் 48 அணிகள் பங்கேற்ற முதல் பிபா உலகக் கிண்ணத்தின் சம்பியனாகவும் புதிய வரலாறு படைத்தது.

போட்டி நிறைவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வீரர்கள் உலகக் கிண்ணத்தை உற்சாகத்துடன் உயர்த்திப் பிடித்து வெற்றியைக் கொண்டாடினர். உலகம் முழுவதிலுமிருந்து வந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் இந்த வரலாற்று வெற்றியை ஆரவாரத்துடன் கொண்டாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 60 ஆண்டு கால உலகக்கோப்பை வரலாற்றில் மோசமான சாதனை

2026 பிபா உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் ஸ்பெயினின் அசுரத்தனமான டிஃபென்சிவ் ஆட்டத்தால், ஆர்ஜென்டினா அணிக்கு ஒரு மோசமான வரலாற்று சாதனை கிடைத்துள்ளது.

பரபரப்பாக இடம்பெற்ற பிபா இறுதிப் போட்டியின் முதல் 45 நிமிடங்களில் ஆர்ஜென்டினா ஒரு ஷாட் கூட கோல் கம்பம் நோக்கி அடிக்கவில்லை.

விரிவான புள்ளிவிவரங்கள் சேகரிக்கத் தொடங்கப்பட்ட 1966-ஆம் ஆண்டிற்குப் பிறகு, உலகக் கிண்ண இறுதிப்போட்டியின் முதல் பாதியில் ஒரு ஷாட் கூட அடிக்காத இரண்டாவது அணி என்ற மோசமான சாதனையை ஆர்ஜென்டினா பெற்றுள்ளது (இதற்கு முன்பு 2022 இல் பிரான்ஸ் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டது).

### இவ் உலக்கிண்ண தொடரின் முக்கிய சாதனைகள்

முதல் முறையாக பிபா கால்பந்தாட்ட உலகக்கிண்ண தொடர் ஒன்றில் அதிக மான (48) அணிகள் பங்கேற்ற போட்டியாகவும், அதிகமான போட்டிகள் (104 போட்டிகள்) இடம்பெற்ற தொடராகவும், அதிக நாடுகள் (அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ) இணைந்து நடத்திய தொடராகவும் இத் தொடர் வரலாறு படைத்தது. மேலும் அமெரிக்கா 78 போட்டிகளையும், கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள் தலா 13 போட்டிகளையும் நடத்தியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

### தங்கக் காலணி எம்பாப்வே வசம்

இரண்டு முறை தங்கக் காலணி பெற்று எம்பாப்வே வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

2026 உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் பிரான்ஸ் அணியின் நட்சத்திர வீரர் கேலியன் எம்பாப்பே வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

தொடர்ச்சியாக இரண்டு முறை உலகக் கிண்ண தங்கப் காலணியை பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை எம்பாப்பே பெற்றுள்ளார்.

அவர் 2026 கால்பந்தாட்ட தொடரின் 8 ஆட்டங்களில் 10 கோல்களை அடித்து அதிக கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்தார்.

கடந்த 2022 கட்டார் உலகக் கிண்ணத்திலும் இவர் 8 கோல்கள் அடித்து தங்கப் காலணியை வெற்றிகொண்டார்.

இதன்படி,உலகக் கிண்ண வரலாற்றில் ஒட்டுமொத்தமாக 22 கோல்களை அடித்துள்ள எம்பாப்பே, லியனல் மெஸ்ஸியை (21 கோல்கள்) பின்னுக்குத் தள்ளி உலகக் கிண்ண தொடரில் அதிக கோல்கள் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

இந்தநிலையில்,இறுதிப் போட்டியில் விளையாடிய ஆர்ஜென்டீனாவின் லியனல் மெஸ்ஸி 8 கோல்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இங்கிலாந்தின் ஜூட் பெல்லிங்காம் மற்றும் நோர்வேயின் எர்லிங் ஹாலண்ட் தலா 7 கோல்களையும் அடித்துள்ளனர்.

### தங்கக் கையுறையை தனதாக்கினார் யுனெய் சிமொன்

நடைபெற்று முடிந்த பிபா உலகக் கிண்ண கால்பந்து பதொடரின் சிறந்த கோல் காப்பாளருக்கான தங்கக் கையுறை விருதை ஸ்பெயின் அணியின் கோல் காப்பாளரான யுனெய்ன் சிமொன் தனதாக்கினார். இவர் அர்ஜென்டினா அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் அர்ஜென்டினா அணியின் கோல் முயற்சிகளை இலாபகமாகத் தடுத்தார்.

மேலும் இந்த உலகக்கின்ன தொடரில் ஸ்பெயின் அணி எதிர்கொண்ட 7 போட்டிகளில் வெறும் 1 கோல் மட்டுமே எதிரணிக்காக விட்டுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2010ஆம் ஆண்டு கெஸிலாஸிற்கு பிறகு தங்கக் கையுறை வெல்லும் 2ஆவது ஸ்பெயின் கோல் காப்பாளர் இவராவார்.

### தொடர் நாயகன் விருது பெற்றார் ஸ்பெயின் அணித்தலைவர் ரோட்ரி

ஸ்பெயின் அணியை உலகக் கிண்ண வெற்றிக்கு வழிநடத்திய மத்தியக்கள வீரர் ரோட்ரி, தொடரின் சிறந்த வீரருக்கான அடிடாஸ் கோல்டன் பால் (Golden Ball) விருதை வென்றார். இறுதிப் போட்டியிலும் அவர் நடுக்களத்தை முழுமையாக கட்டுப்படுத்தி, ஸ்பெயினின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார்.

### சிறந்த இளம் வீரருக்கான விருது பாவ் குபர்சிக்கு

ஸ்பெயின் 20 வயதான ஸ்பெயின் நடுக்காப்பு வீரர் பாவ் குபர்சி, 2026 பிபா உலகக் கிண்ணத்தில் வெளிப்படுத்திய சிறப்பான ஆட்டத்திற்காக சிறந்த இளம் வீரர் (Best Young Player Award)



விருதை வென்றார். போட்டி முழுவதும் அவரது அமைதியான தற்காப்பு, பந்துக் கட்டுப்பாடு மற்றும் முதிர்ச்சியான ஆட்டம், ஸ்பெயின் உலகக் கிண்ணத்தை வெல்ல முக்கிய பங்காற்றியது.

### அதிக கோல்கள் அடித்த அணி

2026 ஆம் ஆண்டிற்கான பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரில் மொத்தம் 108 போட்டிகள் இடம்பெற்றிருக்க அதில் மொத்தமாக 295 கோல்கள் செலுத்தப்பட்டுள்ளது. அதில் ஆர்ஜென்டினா அணி அதிகபட்சமாக எதிரணிகளுக்கு எதிராக மொத்தமாக 17 கோல்களை உட்செலுத்தி முதலிடத்தில் உள்ளது. இதில் அடுத்தடுத்த இடங்களில் பிரான்ஸ் (16 கோல்கள்), பெல்ஜியம் (14 கோல்கள்), இங்கிலாந்து (13 கோல்கள்), ஸ்பெயின் (12 கோல்கள்) ஆகிய அணிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அதிக கோல்களை வாங்கிக் கட்டிய அணிகள்

2026 பிபா உலகக் கிண்ணத்தில் மொத்தமாக 108 போட்டிகளில் 295 கோல்கள் அடிக்கப்பட்டுள்ளன. அதில் எதிரணிக்கு அதிக கோல்களை விட்டுக் கொடுத்த (Goals Conceded) அணிகளில் ஈராக் அணி முதலிடத்தில் உள்ளது. இவ் உலக்கிண்ண தொடரின் மொத்தம் 12 கோல்களை எதிரணிகளிடம் இருந்து பெற்றுள்ளது. அதேபோன்று அடுத்தடுத்த இடங்களில் துனிசியா (12 கோல்கள்), உஸ்பெகிஸ்தான் (11 கோல்கள்), நோர்வே (11 கோல்கள்), மற்றும் இங்கிலாந்து (12 கோல்கள்) ஆகியென அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

மேலும் இத் தொடரின் சம்பியன் மகுடம் சூடிய ஸ்பெயின் அணி தாம் சந்தித்த 7 போட்டிகளில் ஒரே ஒரு கோலை மாத்திரம் எதிரணியான ஜேர்மனிக்கு எதிராக விட்டுக் கொடுத்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.




### 272 மஞ்சள் அட்டைகளும், 15 சிவப்பு அட்டைகளும்

நடந்து முடிந்த 2026 ஆம் ஆண்டுக்கான பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரில் இடம்பெற்ற 108 போட்டிகளில்

மொத்தமாக 272 மஞ்சள் அட்டைகள் காண்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மொத்தமாக 15 சிவப்பு அட்டைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் விதிமுறைகளை மீறி நடக்கும் வீரர்களுக்கு காட்டப்படும் மஞ்சள் மற்றும் சிகப்பு அட்டைகளின் அடிப்படையில் இம் முறை தொடரில் அதிக மஞ்சள் அட்டைகள் பெற்ற அணியாக 15 அட்டைகளுடன் எகிப்து அணி முதலிடத்தில் உள்ளது. மேலும் அதிக சிவப்பு அட்டைகள் பெற்ற அணிகள் பட்டியலில் தென்னாப்பிரிக்கா மற்றும் கத்தார் அணிகள் தலா 2 சிவப்பு அட்டைகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மொத்தம் 871 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசு

இம்முறை இடம்பெற்று முடிந்து 2026ஆம் ஆண்டுக்கான பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரின் வரலாற்றிலேயே அதிக பரிசுத் தொகையுடன் நடைபெற்ற தொடராக இது பதிவாகியுள்ளது. அதற்கமைய இத் தொடரின் மொத்த பரிசுத் தொகை 871 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் சம்பியன் மகுடம் வென்ற ஸ்பெயின் அணிக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணப்பரிசு வழங்கப்பட்டது. மேலும் இரண்டாம் இடம்பெற்ற ஆர்ஜென்டினா அணிக்கு 33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டது.

மேலும் மூன்றாம் இடம்பெற்ற இங்கிலாந்து அணிக்கு 29 மில்லியன் அமெரிக்க டொலர்களும், 4ஆம் இடம்பெற்ற பிரான்ஸ் அணிக்கு 27 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கி வைக்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் குவாட்டர் பைனல் சுற்றுடன் வெளியேறிய 5 முதல் 8 ஆம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு தலா 19 மில்லியன் அமெரிக்க டொலர்களும், சுப்பர்-16 தொடருடன் வெளியேறிய 9 முதல் 16 இடங்களைப் பெற்ற அணிகளுக்கு தலா 15 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் ரவுண்ட் ஆஃப் 32 உடன் வெளியேறிய அணிகளுக்கு தலா 11 மில்லியன் அமெரிக்க டொலர்களும், மிகுதி 33 தொடக்கம் 48 வரையான அணிகளுக்கு தலா 9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உலக சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் அணி, Performance Prize + Qualification Funding + Preparation Funding ஆகியவற்றை சேர்த்து கூ63.5 மில்லியனுக்கும் அதிகமான தொகையைப் பெறுக் கொண்டது.

### வெற்றியால் கண்ணீர் மல்கிய லாமின் யமால்

2026 பிபா உலகக் கிண்ணத்தை வென்ற தருணத்தில், ஸ்பெயின் அணியின் இளம் நட்சத்திர வீரரான 19 வயதேயான லாமின் யமால் தனது உணர்ச்சிகளை அடக்க முடியாமல் கண்ணீர் மல்கிய காட்சி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

வெற்றியின் மகிழ்ச்சியையும், அந்த தருணத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்த யமால், உலகக் கிண்ணம் போன்ற மிகப்பெரிய பட்டத்தை தனது இளம் வயதிலேயே வென்ற பெருமையை உணர்ச்சியுடன் வெளிப்படுத்தினார்.

ஏற்கனவே யூரோ கிண்ணத்தை வென்றிருந்த யமால், தற்போது உலகக் கிண்ணத்தையும் கைப்பற்றி, தனது கால்பந்து பயணத்தில் மிகப்பெரிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

இளம் வயதிலேயே உலகின்

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 JULY 08 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மக்களின் இதயத்தில் நிலைத்து நிற்கும் தூதுவர் கஹ்தானி

அண்மைக்காலத்தில் இலங்கையில் பணிபுரிந்த வெளிநாட்டுத் தூதுவர்களின் நான்கு வருட பதவிக்காலத்தை முடித்து தாயகம் திரும்பும் சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி இலங்கை மக்களின் இதயத்தை நீடித்து நிலைத்து நிற்கும் ஒரு ராஜதந்திரியாகத் திகழ்கிறார்.

சவூதி அரேபியா - இலங்கை உறவை மேம்படுத்துவதில் இதற்கு முன் எந்தத் தூதுவரும் பணியாற்றாத ஒரு பங்காளிப்பில் சவூதி தூதுவரின் பெயர் நிலைத்து நிற்கும்.

தனது பதவிக் காலத்தினை தூதுவர் கஹ்தானி 24 மணி நேரமும் இயங்கி, தமது நாட்டின் உறவை பலப்படுத்துவதற்குச் செயற்பட்டதனை நாட்டு மக்கள் அறிவர்.

குறிப்பாக இலங்கை பொருளாதார மற்றும் அனர்த்த சவால்களை எதிர் நோக்கிய சந்தர்ப்பங்களில் எல்லாம் சவூதி அரேபியாவின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதில் அவர் மும்முரமாகச் செயற்பட்டார்.

தனது நாட்டின் சேவைகள் நாட்டின் நாலா புறங்களிலும் வாழும் மக்களுக்கு இன, மத, பேதமின்றி கிடைப்பதற்கு கடந்த நான்கு வருட காலத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பினை அவர் பிரியாவிடை பெற்றுச் செல்லும் நேரத்தில் இலங்கை வாழ் மக்களின் பேசுபொருளாக அமைந்துள்ளது. நூற்றுக்கணக்கான இலங்கையர்களுக்கு புனித ஹஜ் மற்றும் உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்கு அவர் தனது நாட்டின் ஊடாக வாய்ப்பினை பெற்றுக் கொடுத்ததனை நன்றியுடன் இலங்கை முஸ்லிம்கள் நினைவு கூர்கின்றனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட ஒரே முதலாவது ராஜதந்திரியாக இவரது பெயர் வரலாற்றில் பதிவாகியுள்ளது. முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமூகத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர் அரசாங்க தரப்பிடம் ராஜ தந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்தியதனை முஸ்லிம் சமூகம் நன்றியுடன் நினைவு கூர வேண்டும்.

இலங்கை அரசுடன் பேணி வந்த நல்லுறவு காரணமாக சமூகம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு அவர் சுமுகமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு செய்த முயற்சிகளை இலங்கை முஸ்லிம்கள் நன்றியுடன் நினைவு கூர்வர்.

இலங்கையின் ஊடக துறையினருக்கு குறிப்பாக, முஸ்லிம் ஊடகத்துறையினருக்கு தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி ஆற்றிய பங்களிப்பினை தம் நன்றியுடன் நினைவு கூர்கின்றனர்.

நான்கு வருடங்களிலும் சுமார் 200க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களை புனித உம்ரா, ஹஜ் கடமைகளை நிறைவேற்ற அவர் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

## எஸ்.ஏ JLFS சம்பியன்ஷிப் தேசிய மட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றார் பஸ்லி முஹம்மது பராஸ்




நீர்கொழும்பு அல் ஹிலால் மத்திய கல்லூரி மாணவர் பஸ்லி முஹம்மது பராஸ் ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்ற 3ஆவது எஸ்.ஏ தடகள சம்பியன்ஷிப் தொடரின் குண்டெறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை (2ஆம் இடம்) தனதாக்கினார்.

19ஆம் திகதி ஜூலை கொழும்பு சுகததாச சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், 15 வயதிற்குட்பட்ட பிரிவில் குண்டெறிதல் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் 12.40 மீற்றர் தூரம் எறிந்து இரண்டாம் இடத்தைப் பெற்று தனது பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்தச் சாதனைக்காக அவருக்கு சான்றிதழ் மற்றும் வெள்ளிப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் தேசிய மட்டத்தில் இவ்வாறு திறமையை வெளிப்படுத்திய பஸ்லி முஹம்மது பராஸிற்கு அதிபர் உட்பட பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பெற்றோர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் மாணவர்கள் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ஜென்டினாவை...

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

மிகப்பெரிய கால்பந்து மேடைகளில் சாதனை படைத்துள்ள யமால், ஸ்பெயின் அணியின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக ரசிகர்களால் பாராட்டப்பட்டு வருகிறார்.

இந்தக் கண்ணீர் வெற்றியின் மகிழ்ச்சியையும், பல ஆண்டுகளின் உழைப்புக்கான பெருமையையும் வெளிப்படுத்தும் ஒரு மறக்க முடியாத தருணமாக அமைந்துள்ளது.

சம்பியன் மகுடக் கனவு சிதைந்தமையால் கண்ணீர் வடித்த லியோனல் மெஸ்ஸி

கால்பந்து விளையாட்டின் மிகச்சிறந்த வீரரான ஆர்ஜென்டினா அணியின் தலைவரான லியோனல் மெஸ்ஸியின் சர்வதேச உலகக்கிண்ண சகாப்தம், மெட்லைஃப் மைதானத்தின் புல்வெளியில் கண்ணீருடன் ஒரு சோகமான முடிவைச் சந்தித்துள்ளது.

2026 பிபா உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் ஸ்பெயினிடம் ஆர்ஜென்டினா அணி 1:0 என வீழ்ந்ததைத் தொடர்ந்து, மைதானத்திலேயே அமர்ந்து மெஸ்ஸி கண்ணீர் விட்டு அழுத இந்த உணர்ச்சிகரமான புகைப்படம் ஒட்டுமொத்த உலகக் கால்பந்து ரசிகர்களின் இதயங்களையும் உலுக்கியுள்ளது.

தனது 39ஆவது வயதில், ஆர்ஜென்டினா அணிக்காகத் தனது கடைசி உலகக்கிண்ண ஆட்டத்தை விளையாடிய மெஸ்ஸி, எப்படியாவது மீண்டும் ஒருமுறை உலகக்கிண்ணத்தை வென்று விட வேண்டும் என்று மைதானத்தில் இறுதிவரை போராடினார்.

ஸ்பெயின் அணியின் அசாத்தியமான டிஃபென்ஸ் மற்றும் கட்டுக்கோப்பான ஆட்டத்தால், ஆர்ஜென்டினா அணியால் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போனது. இறுதிப்போட்டியில் தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்தியும் அணியை வெற்றியை நோக்கிக் கொண்டு சேர்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் மெஸ்ஸியின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.



இறுதி விஸில் ஊதப்பட்டு ஸ்பெயின் சம்பியனாக அறிவிக்கப்பட்ட அடுத்த நொடி, தோல்வியின் பாரத்தைத் தாங்க முடியாமல் மெஸ்ஸி மைதானத்திலேயே அப்படியே அமர்ந்து தன் முகத்தைப் பொத்தி அழுதார்.

2022இல் உலகக்கிண்ணத்தை வென்று ஆர்ஜென்டினாவை உச்சத்துக்கே கொண்டு சென்ற தங்களின் "மந்திரவாதி" இப்படித் தன் கடைசி உலகக்கிண்ணப் போட்டியில் கண்ணீருடன் அமர்ந்திருப்பதை டிவியிலும், மைதானத்திலும் பார்த்த லட்சக்கணக்கான ஆர்ஜென்டினா ரசிகர்கள் தங்களது கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் கதறி அழுதனர்.

கால்பந்து உலகம் எத்தனையோ வெற்றிகளையும் தோல்விகளையும் பார்த்திருக்கலாம், ஆனால் தங்களின் "கால்பந்து கடவுள்" மெஸ்ஸியின் இந்த கண்ணீர் விடைபெறுதல், உலகக்கிண்ண வரலாற்றின் இதயத்தை ரணமாக்கும் ஒரு பக்கமாக என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

### கைக்கலப்பில் முடிந்த 2026 பிபா உலகக்கிண்ணம்

கூடுதல் நேரத்தில் ஃபெர்ரான் டோரஸ் (Ferran Torres) அடித்த ஒரே கோலின் மூலம் ஸ்பெயின் தனது இரண்டாவது உலகக் கிண்ணத்தை வென்றது. ஆனால் இறுதி விசில் ஒலித்தவுடன் ஏற்பட்ட வீரர்கள் மோதல், வெற்றிக் கொண்டாட்டத்தை மங்கச் செய்தது.


ஸ்பெயின் மாற்று வீரர்கள் மைதானத்திற்குள் ஓடி வந்து கொண்டாடியபோது, ஆர்ஜென்டினா பின்கள வீரர் நஹுவேல் மொலினா ஸ்பெயின் வீரர் ஒருவரை நோக்கி கையை ஓங்கியதாகக் கூறப்படுகிறது.

ஆர்ஜென்டினா நடுகள வீரர் லியாண்ட்ரோ பரேட பல மோதல்களில் ஈடுபட்டதுடன், போட்டி முடிந்த பின்னர் சிவப்பு அட்டையும் பெற்றார்.

மேலும், அவர் ஸ்பெயின் வீரர் எரிக் கார்சியாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு, பின்னர் கவி யை தரையில் தள்ளிய காட்சிகளும் வெளியாகின.

இந்த சம்பவத்தை முன்னாள் இங்கிலாந்து வீரர்களும், தொலைக்காட்சி கால்பந்து விமர்சகர்களும் கடுமையாக விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





எம்.எஸ். அமீர் ஹுசைன்



# சிறைச்சாலைக்குள் வெறித்தனம்

# போதைப்பொருள்

# கைதிகள் காரணமா?

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் கைதிகளுக்கிடையில் 2026.07.05 ஆம் திகதி மாலை ஏற்பட்ட மோதலில் சிறைச்சாலை அதிகாரிகள் 07 பேர் உட்பட 26 பேர் பலியாகி உள்ளனர். இவர்களில் 20 பேர் கைதிகளாவர். சுமார் 100 பேர்கள் அளவில் காயமடைந்துள்ளனர். மோதல் சம்பவம் இடம்பெற்றபோது இந்த சிறைச்சாலைக்குள் 2050 கைதிகள் அளவில் இருந்துள்ளனர். இந்த தாக்குதல் தொடர்பாக விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இவர்களில் 17 பேர் பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறு சிறைச்சாலைக்குள் கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பாக அவர்களது உறவினர்கள் மிகுந்த ஆத்திரமும் கவலையும் அடைந்துள்ளனர். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்று பொதுமக்களும் எதிர்க்கட்சியும் குற்றம் சுமத்தி வருகின்றனர். பாதுகாப்பானதாக இருக்க வேண்டிய இடமான சிறைச்சாலைகள் பாதுகாப்பற்ற இடங்களாக மாறி இருப்பது மனிதாபிமானமற்ற செயல் என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

ஆனாலும் இந்தத் தாக்குதல் மற்றும் மோதல் சம்பவம் தொடர்பாக அரசாங்கம் இது வரையில் உறுதியாக எந்த நிலைப்பாட்டையும் அறிவிக்கவில்லை.

இருந்தாலும் சிறைச்சாலை வன்முறைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்பதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித் துள்ளார்.

சிறைச்சாலைகளுக்குள் தாக்குதல், வன்முறைகள் என்பது இந்த நாட்டில் புதிய விடயமாக இல்லை. ஏற்கனவே வெளிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் ஒன்றின் போதும் இவ்வாறாக கைதிகள் பலர் கொல்லப்பட்டனர். நீர்கொழும்பு சிறைச் சாலையில் ஏற்பட்ட மோதலுக்கான பின்னணி காரணம் என்ன? திட்டமிட்ட செயலா அல்லது தற்செயலாக ஏற்பட்ட மோதல் சம்பவமா? திட்டமிடப்பட்ட செயலாக இருந்தால் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்ற கோணங்களில் விசாரணைகளை இரகசியப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். இந்த விசாரணைகளின் போது ஒவ்வொரு கைதியும் தனித்தனியாக விசாரணை செய்யப்பட இருப்பதாக அறிய முடிகின்றது. நீர்கொழும்பு சிறைச சாலையில் மோதல் நடைபெற்ற பின்னர் அங்கிருந்து 800 கைதிகள் அளவில் பூசா மற்றும் அங்குணுகொல சிறைச் சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட பின்னர் அந்த சிறைகளிலும் இருவர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இத்தகைய மோதல் அல்லது சிறைச் சாலைக்குள் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களின் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால் மேலும் பல விடயங்கள் புலனாகின்றன. 1983 ஆம் ஆண்டு வெளிக்கடை சிறைச்சாலைக்குள் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. சிங்கள கைதிகள் அங்கிருந்த தமிழ் கைதிகளை தாக்கி மோ-தலை உண்டுபண்ணி இருக்கின்றனர். இந்தத் தாக்குதல் சம்பவம் காரணமாக 53 தமிழ் கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். 1987 ஆம் ஆண்டு மீண்டும் வெளிக்கடை சிறைச்சாலைக்குள் சுவரை இடித்துக் கொண்டு அப்போதிருந்த ஜே.வி.பி. கைதிகள் தப்பியோட முயற்சி செய்தனர். கண்டி போகம்பரை சிறைச்சாலைக்குள் கலவரம் நடைபெற்று கைதிகளுக்கிடையில் மோதல் இடம்பெற்றுள்ளன. 1987 ஆம் ஆண்டு கண்டி போகம்பரை சிறைச்சாலையில் மோதல் நடைபெற்றிருக்கின்றது. 1988 ஆம் ஆண்டு டிசம்பரில் மெகசின் சிறைச் சாலையில் கலவரம் இடம் பெற்றிருக்கின்றது. 2012 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் திகதி வெளிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் குழப்பம் விளைவித்து மோதலை ஏற்படுத்தினர். அந்த மோதலில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர். இவ்வாறே ஏற்கனவே தங்காலை சிறைச்சாலையிலும் மோதல் ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சம்பவங்கள் நடக்கின்ற போது ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு மோதலுக்கான காரணங்களைக் கண்டறிவதில் அந்தந்த காலப்பகுதியில் இருந்த அரசாங்கங்கள் நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளன. 2012 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலப் பகுதியில் 27 கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பாக வும் சுயாதீன ஆணைக்குழு ஒன்று விசாரணைகளை மேற்கொண்டதாயினும் உரிய முறையில் அறிக்கைகள் வெளிவர வில்லை. இவ்வாறாக அடிக்கடி சிறைச்சா லைகளுக்குள் ஏன் மோதல்களும் குழப்பங்களும் ஏற்படுகின்றன என்று ஆராய்ந்து பார்க்கின்ற போது, பல உண்மைகள் வெளிப்படுவதாக உள்ளன. எவ்வாறாயினும் சிறைச்சாலைகள் என்பது குற்றச் செயல்களைப் புரிகின்ற நபர்களை நீதிமன்றம் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்து குறிப்பிட்ட காலம் சிறைத் தண்டனை என்று தண்டனை வழங்கிய பின்னர் சிறைச் சாலைகளுக்கும் தடுப்பு முகாம்களுக்கும் அனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டவர்களை எந்தவொரு சிறைச்சாலைகளிலும் சுகபோகங்களை வழங்கி ஆடம்பர வசதிகளுடன் பராமரிப்பதில்லை. மிகவும் குறைந்த வசதிகளுடன் கட்டுப்பாடுகளுடனும் கஷ்டங்களுடனும் காலம் கடத்த அல்லது தண்டனையை அனுபவிக்க விடப்படுகின்ற இடங்களாகும். ஆனாலும் இலங்கையில் சிறைச்சாலைகளில் இருக்கின்ற இடவசதி 11,000 கைதிகளுக்காகும். இந்த இட வசதிகளுக்குள் தற்போது 41,000 கைதிகள் அளவில் உள்ளனர். மோதல் இடம்பெற்ற நீர்கொழுப்பு சிறைச்சாலையில் 400 கைதிகளுக்கான இடவசதி இருக்கின்ற நிலையில், அங்கு 2080 கைதிகள் இருந்துள்ளனர். வெளிக்கடை சிறையில் 1374 கைதிகளுக்கான இடவசதி இருக்கின்ற நிலையில் 3800 கைதிகள் உள்ளனர். ரிமான்ட் சிறைச்சாலையில் 310 கைதிகளுக கான இடவசதியில் 2126 கைதிகளும் மெகசின் சிறையில் 608 கைதிகளுக்கான இடவசதியில் 2600 கைதிகளும் இருக்கின்றனர். இவ்வாறான இடவசதிக்குள் கைதிகள் இருக்கின்ற போது உணவு, காற்றோட்டம், மருத்துவ சுகாதார வசதிகள் மிகவும் அடிமட்ட நிலையில் இருக்கின்ற போது இடநெருக்கடி கைதிகள் மன உழைச்சலுக்கும் உளவியல் ரீதியான தாக்கங்களுக்கும் ஆளாகக் காரணமாக மாறுகின்றது.

நீர்கொழும்பில் இடம்பெற்ற மோதலுக்கு முன்னரும் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதும் அதிகாரிகள் அதனைக் கண்டு கொள்ளத் தவறிவிட்டனர். அதனால் மனவிரக்திக்கு ஆளான கைதிகள் இவ்வாறான மோதலில் ஈடுபட்டனர் என்று கைதிகளது பாதுகாவலர்கள் அல்லது பெற்றோர் தெரிவிக்கின்றனர். ஆனாலும் மோதலுக்கான காரணம் குறித்து அரச மட்ட அதிகாரிகள் தகவல் தெரிவிக்கையில், சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வந்தமை தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளு-க்கு தகவல் வழங்கினார்கள் என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட தரப்பு மற்றைய தரப்பை தாக்க-ியதோடு, சிறைச்சாலை அதிகாரிகள் தாக்குதலால் பாதிக்கப்பட்ட கைதிகளை காப்பாற்ற முயற்சி செய்த போது அதி-காரிகளை ஈவு இரக்கமின்றி கைதிகள் தாக்கி உள்ளனர். அதன் காரணமாகவே 07 அதிகாரிகள் பலியாகி உள்ளனர் என்று கைதிகளை குற்றம் சுமத்துகின்றனர்.




எதுவானாலும் தாக்குதலின் பின்னர் ஒரு தரப்பு அரசாங்கத்தின் மீது குற்றச் சாட்டுக்களை முன்வைத்து கடுமையான விமர்சனங்களைச் செய்து வருகின்றனர்.

ஆனாலும் அரசாங்கத் தரப்பு இத்தகைய குற்றச்சாட்டுக்களை மறுத்திருப்பதோடு, இந்த மோதலானது பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த கடுவெல்ல சுரேஷ் என்பவரது திட்டமிட்ட செயல் என்றும் இவர் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்ற பாதாள உலக மற்றும் போதைப்பொருள் கடத்தல் புள்ளியின் சகா என்றும் கூறி இருக்கின்றது.

எவ்வாறானாலும் கைதிகள் யாராக இருந்தாலும் அவர்களும் மனிதர்கள் என்ற அடிப்படையில் தண்டனையாக சிறைவாசம் அனுபவிக்கின்ற காலப்பகுதியை சிறைக்குள் பாதுகாப்பாகக் கழிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டியது அரசின் கடமையாகும். அதேநேரம் இவ்வாறான தாக்குதல்கள், மனித உயிர்ப்பலி என்று வரும் போது அது தொடர்பாக நீதியானதும் சுயாதீனமானதுமான விசாரணை நடத்தப்பட வேண்டும். அதிகாரிகள் மூலம் தவறுகள் நடந்திருந்தால் அவர்களுக்கு எதிராக தகுந்த முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன்றேல் அதனால் பதவியில் இருக்கின்ற அரசுக்கும் அதிகாரிகளுக்கும் அபகீர்த்தி ஏற்படுகின்றது.

அதேநேரம் சிறைச்சாலைகளுக்குள் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். இடநெருக்கடி ஏற்படுகின்ற போது உணவு, மலசலகூடம், நீர், நித்திரை செய்தல் போன்ற தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள கைதிகள் முற்படும் போது மோதல்கள் உருவாகின்றன. அத்துடன் சிறைச்சாலைக்குள் சிறைக் காவலர்களால் கைதிகள் சித்திரவதை செய்யப்படுதல், எல்லை மீறிய தண்டனை காரணமாக கைதிகள் மரவிரக்திக்கு உள்ளாகி ஈவு இரக்கமற்றவர்களாக மாறுகின்றனர். கைதிகளால் சிறைச்சாலை அதிகாரிகள் கொல்லப்பட்டிருக்கின்ற முறைகளை பார்க்கின்றபோது இத்தகைய மனவிரக்தி இருந்திருப்பது புலனாகின்றது. கைதிகள் வெறி தீரும் அளவிற்கு அதிகாரிகளது தலையில் கற்கலை தூக்கி போட்டும் பிறப்பு உறுப்பை வெட்டியும், முன் துவாரத்தினுள் தடிகளை உள்ளே நுழைத்தும் அதிகாரிகளை கொலை செய்திருப்பது மரணவிசாரணை அதிகரிகளது சட்டவைத்தி பரிசோதனைகளில் இருந்து வெளிப்பட்டிருக்கின்றது.

அப்படியென்றால் எந்தளவிற்கு வெறித்தனம் இந்த கைதிகளுக்கு இருந்திருக் கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

தற்போது கொழும்பை மையப்படுத்தியதாக அமைந்துள்ள சிறைச்சாலைகளை இடமாற்றம் செய்வதற்காக நிதி அமைச்சும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து மில்லாவ பிரதேசத்தில் சகல வசதிகளுடன் கூடிய சிறைச்சாலை அமைக்கும் நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டு ஆரம்பித் ததாயினும் அந்தப் பணிகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட வில்லை என்று அறிய முடிகின்றது.

அத்துடன் வடரெக்க பகுதியிலும் சிறைச்சாலைக்கான இடவசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதனால் நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் போன்று எதிர்காலத்திலும் மோதல்கள் இடம்பெற்று கைதிகள் அநியாயமாக உயிரிழக்கும் நிலை ஏற்படுவதற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைய நிரந்தரத் தீர்வு வேண்டும்.



# டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

(கே. ஹமிட்)

டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அம்பாரை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலப்பை தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிந்தவூர் பிரதேசத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோது பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலப்பை இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், டெங்கு நோயிலிருந்து மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் அம்பாரை மாவட்டத்தில் அனைவரினதும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

இந்த விடயத்தில் கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் காரியாலயம், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள், அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனம், உலமா சபை மற்றும் பொது அமைப்புகளின் பங்களிப்பு பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் அனைவரும் தொடர்ந்தும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்களின் வழிகாட்டலின் கீழ் முஸ்லிம் காங்கிரஸ் இளைஞர் காங்கிரஸ் அண்மையில் கல்முனையில் விழிப்புணர்வுக் கூட்டமொன்றை நடத்தி பிரதேச செயலாளர் பிரிவுகளில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு அனைவரினதும் ஒத்துழைப்புடன் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.



கிழக்கு மாகாணம் முழுவதும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக நிந்தவூர் பிரதேச செயலகத்தில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் மக்கள் சார்பில் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலப்பை தெரிவித்தார்.

## இலங்கை - சவூதி அரேபிய இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திய சவூதி தூதுவருக்கு கௌரவிப்பு!



இலங்கைக்கான தனது இராஜதந்திரக் கடமைகளை நிறைவு செய்து விடைபெற்றுச் செல்லும் சவூதி அரேபியத் தூதுவர், அதிமேதகு காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி (His Excellency Khalid bin Hamoud Al-Kahtani) அவர்களுக்கு, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் சார்பில் இன்று கொழும்பிலுள்ள சவூதி அரேபியத் தூதரகத்தில் வைத்து விசேட நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

தனது பதவிக்காலத்தில் இலங்கை மற்றும் சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதிலும், கலாசார மற்றும் சமூக மேம்பாட்டிற்குத் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதிலும் அவர் ஆற்றிய மிகச் சிறந்த பங்களிப்பைப் பாராட்டி இந்த நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில்:

சமய மற்றும் கலாசார விவகார பிரதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ முனீர் முளப்பர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் ஆகியோர் கலந்துகொண்டு தூதுவருக்கு தமது நெஞ்சார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

இவர்களுடன் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், பணியாளர்கள் பலரும் இச்சிறப்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த நீண்டகால நல்லுறவு எதிர்காலத்திலும் மேலும் பலமடைய வாழ்த்துகிறோம்!

## கல்வி பட்டங்களைப் பெறுவதல்ல.. பண்பாடுள்ளவர்களாக இருக்க வேண்டும்

**பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.சி. நாசர் தெரிவிப்பு**






(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

நாம் பெறுகின்ற கல்வியானது வெறுமனே பட்டங்களை மாத்திரம் பெறுவதற்கான கல்வியாக அல்லாமல் பண்பாடுள்ள கல்வியாக இருக்க வேண்டும் அப்போது தான் பெற்ற கல்வி பெறுமதியுள்ளதாக அமையும். வெறுமனே பெயருக்கு முன்னால் பட்டம் போட்டுக்கொள்வதில் எந்தப் பிரயோசனமும் கிடையாது என தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் பேராசிரியர் எம்.ஏ.சி.நாசர் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகப்பிரிவிலுள்ள தியாவட்டவான் அறபா வித்தியாலயத்தின் முப்பெரும் விழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தாம் பெறும் கல்வி சமூகத்துக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும். வெறுமனே பட்டங்களை மாத்திரம் பெறுவதை நோக்கமாகக்கொண்ட கல்வியால் இந்த சமூக எதனையும் அடைந்து விட முடியாது. அவ்வாறு அடைந்ததாக சரித்திரமும் இல்லை. படித்தவர்கள் பண்பாடுள்ளவர்களாக இருக்க வேண்டும். கல்வியைப் பெற்றவர்களிடம் பண்பாடு இல்லையென்றால் அது சிறந்த கல்வியாக அமையாது.

கல்வியைப்பெறுவது அனைவருக்கும் கட்டாயமானதாகும். கல்வி மாத்திரமே நிரந்தரமானது. அது உயர்வினைத் தரவல்லது. ஒருவரிடம் கல்வி இல்லாமல் கிடைக்கும் பெயரும் புகழும் நிரந்தரமானதல்ல. எனவே, கல்வியைப் பெற்ற சமூகமாக அதனூடாக சமூகம் நன்மை பெறும் வகையில் நாம் ஒவ்வொருவரும் நம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனத்தெரிவித்தார்.

ஓட்டமாவடி கோட்டக்கல்வி அலுவலகப்பிரிவிலுள்ள தியாவட்டவான் அறபா வித்தியாலயத்தின் முப்பெரும் விழா கடந்த 10ஆம் திகதி மாலை தியாவட்டவான் ஹொறிஸோன் உள்ளக அரங்கில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் எம்.ஏ.அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலய கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.ஜவாத், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட கணக்கியல் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.சி.ஏ. நாசர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.எம்.தாஹிர், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான், EPSI இணைப்பாளர் ஆர்.ஜனைடீன், கோறளைப்பற்று மத்தி கிளீன் ஸ்ரீலங்கா இணைப்பாளர் ஏ.எல்.சமீம், பிரஜாசக்தி தியாவட்டவான் பிரதேச தவிசாளர் புஹாரி பௌர்டீன், தொழிலதிபர் எச்.எம்.ஏ.அனீஸ், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எம்.அன்வர் சதாத், முன்னாள் பதிவாளர் எம்.ஐ.அஹமட் லெப்பை, மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர்கள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், வித்தியாலய அதிபர் மற்றும் மாணவர்களுக்கு வழிகாட்டி கற்பித்த ஆசிரியர்களும், அதிதிகளும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## உக்குவளை அஹதிய்யா மாணவிகளுக்கு பாடசாலையில் கௌரவம்



(உக்குவளை ஜெலீல்)

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் ஏற்பாட்டில் மாத்தளை மற்றும் நுவர எளிய அஹதிய்யா அறநெறி பாடசாலை மாணவர்களுக்கா அறிவுப் பூங்கா எனும் கேள்வி பதில் போட்டி சமீபத்தில் கண்டியில் நடைபெற்றது இந் நிகழ்ச்சியில் பங்குபற்றி மாத்தளை மாவட்டத்தில் இரண்டாம் இடம்பெற்ற உக்குவளை அஹதிய்யா (Religious) பாடசாலை மாணவியர்களுக்கு இப்பாடசாலை உதவி அதிபரும் ஆசிரியையுமான திருமதி பர்ஹானா யாசின் மலர்ச் செண்டுகள் வழங்கி பாராட்டி கௌரவித்தார்.

## பிரைட் :ஃபியூச்சர் இ-லேர்னிங் கல்வியகத்தின் 6ஆவது பட்டமளிப்பு விழா





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கையின் முன்னணி ஒன்லைன் கல்வி நிறுவனங்களில் ஒன்றான பிரைட் ஃபியூச்சர் இ-லேர்னிங் கல்வியகத்தின் 6ஆவது பொதுப் பட்டமளிப்பு மற்றும் விருது வழங்கும் விழா கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவில் பிரைட் ஃபியூச்சர் கல்வியகம் மூலம் ஒன்லைன் வழியிலான பல்வேறு கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு டிப்ளோமா பட்டங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக விளையாட்டு அறிவியலில் முதுகலை மாணியும், நுமீசு ஸ்ரீலங்காவின் பொதுச் செயலாளருமான ஜானக சமரசிங்க கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக ஆர்.ஜே மீடியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும், ஊடகவியலாளருமான ஏ. எம். இன்ஷாப் கலந்துகொண்டார்.

பிரைட் ஃபியூச்சர் இ-லேர்னிங் கல்விகத்தின் தலைவர் முகமது ஆகிப் மற்றும் அதன் நிர்வாகப் பணிப்பாளர் திருமதி பாத்திமா ருஷ்தா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், நாடளாவிய ரீதியில் இருந்து வருகை தந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஒன்லைன் மூலம் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் தரமான கல்வியை வழங்கி, மாணவர்களின் எதிர்காலத்தை வளம்படுத்துவதில் பிரைட் ஃபியூச்சர் கல்வியகம் ஆற்றிவரும் பங்களிப்பு விழாவில் வருகை தந்த பலராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உக்கிரமடையும் வளைகுடாப் போர்

# கானல் நீராகும் சமாதானம்

எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகளும் பரஸ்பரம் ஒருவரையொருவர் மிகவும் கடுமையாக தாக்கி அழிக்கும் வகையில் நிலை மாறி வருவதை காண முடிகிறது. இந்த நிலையில் அமெரிக்க அதிபர் டொனாட்ல் டிரம்ப் 'ஈரான் மீண்டும் எங்களுடன் அமைதி பேச்சு வார்த்தை நடத்தி ஒரு முடிவுக்கு வர வேண்டும்.. அப்படி இல்லை என்றால் அடுத்த வாரம் ஈரானில் உள்ள அணு உலைகள் மற்றும் பாலங்களை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்துவோம்.. அந்த நாட்டில் ஒருவரும் இருக்க மாட்டார்கள்' என்று எச்சரித்தார். மேலும் 'நாளை இரவு ஈரானை கடுமையாக தாக்கப் போகிறோம்' எனவும் அவர் கூறியிருக்கிறார்.. ஈரானுடனான போரை நீட்டிக்க இஸ்ரேல் திட்டமிட்டு செயல்படுவதாக அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் குற்றம்சாட்டினார். இது தொடர்பாக அவர் கூறுகையில், அமெரிக்க வெளியுறவு கொள்கையை தங்களுக்கு சாதகமாக மாற்றி, ஈரானுடனான போரை எந்த ஒரு தெளிவான இலக்கும் இன்றி காலவரையறையின்றி நீட்டிக்க இஸ்ரேல் திட்டமிட்டு செயல்படு கிறது. அமெரிக்கா-ஈரான் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதை தடுக்க, இஸ்ரேல் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கூடிய சில பிரிவினர் அமெரிக்காவில் ரகசிய இணைய பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகிறது. இந்த குற்றச்சாட்டுகளை சர்வதேச அரங்கில் மிக பெரிய அளவில் ஆன பேச்சு பொருளாக மாறி வருகிறது என்பதை யாதர்த்தமான நிலையாகும் அதே நேரத்தில் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஒரு தற்காலிக ஒப்பந்தத்தில் கையெழுத்தி ட்ட ஒரு மாதத்துக்குள்ளேயே, இரானும் அமெரிக்காவும் மீண்டும் பரஸ்பரம் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளன. மீண்டும் ஏற்பட்டுள்ள இந்த பதற்றங்கள் கச்சா எண்ணெய் விலையை உயரச் செய்துள்ளன.சர்வதேச ஆற்றல் முகமையின் (IEA) கூற்றுப்படி, ஒவ்வொரு நாளும் சுமார் 20 மில்லியன் பேரல் எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் இந்த நீரிணை வழியாகக் கடந்து செல்கின்றன, இது உலகளாவிய கடல்வழி எண்ணெய் வர்த்தகத்தில் தோராயமாக நான்கில் ஒரு








பங்காகும். இந்த ஏற்றுமதிகளில் சுமார் 80மூ ஆசிய நாடுகளைச் சென்றடை கின்றன.
இந்த நிலையில் பஹ்ரைனில் உள்ள அமெரிக்கா கப்பற்படை தளங்கள் ஈரான் ராட்சத மிசைல் தாக்குதல் மூலம் ஏராளமான அழிவை சந்தித்து வருகிறது என்பதை அந்த நாட்டின் அரசே உறுதி செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது.
அதேநேரத்தில் குவைத்தில் உள்ள அமெரிக்காவின் மிகப்பெரிய வெடி குண்டு கிடங்குகள் ஈரான் வீசிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் தாக்குதல் மூலம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது என்று ஈரான் தெளிவாக அறிவிப்பு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. குவைத்தில் உள்ள அல் மினா அப்துல்லா தளம் மிகவும் கடுமையாக தாக்குதலுக்கு உள்ளான நிலையில் அமெரிக்கா வின் லாஜிஸ்டிக்ஸ் தளங்கள் முழுமையாக காலி செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.
ஜோர்டான் அமெரிக்கா தளங்கள் ஈரான் ராட்சத அலை தாக்குதல் மூலம் அமெரிக்காவின் F 35 ..F15--F16 accessories முழுமையாக தேசம் அடைந்தது இந்த தாக்குதலை ஈரான் வின் வெளி படை முன்னின்று தாக்குதல் நடத்திய நிலையில் பல MQ 9 ஆளில்லா விமானங்கள் முழுமையாக அழிக்கும் வகையில் நிலைமை மிகவும் மோசமடைந்தது வருகிறது என்பதை யாதர்த்தமான நிலையாகும். இந்த தாக்குதலை ஈரான் ஷாஹீத் ரக ஆளற்ற விமானங்கள் குவைத் அமெரிக்கா ராணுவ நிலைகள் முழுமையாக ஈரானால் தாக்கப்பட்டது.ஜோர்டான் தாக்குதலை ஈரான் புதன் கிழமை காலை நடத்திய மிகப் பெரிய அழிவை அமெரிக்கா வெளிவிவகார அமைச்சர் மார்க்கோ ஷரூபியோ கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.
அதே சமயம் ஒரு சமூக ஊடக பதிவில், ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஹெர்மூஸ் ஜலசந்தி திறக்க அமெரிக்கா வுக்கு 20 சதவீதம் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்து உலகத்தை முழுமையாக அதிர்ச்சி அடையச் செய்தது குறிப்பிடத்தக்கது.அதே போல் ஈரானிய துறைமுகங்களை அமெரிக்கா முற்றுகையிட்டதை மீண்டும் வலியுறுத்தியுள்ளார், மேலும் தனது 20 சதவீத கட்டண அறிவிப்பில் யு-டர்ன் எடுத்துள்ளார்.. இந்த தாக்குதல் தொடர்ச்சியாக புஷேர், பண்டார் அப்பாஸ், மஹ்ஷஹர் மற்றும் அபாதன் நகரங்களில் குண்டுவெடிப்புகள் நடந்ததாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்ட நிலையில், அமெரிக்க இராணுவம் ஈரான் மீது மேலும் தாக்குதல்களை நடத்துகிறது.
இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஈரான் ஐ ஆர் ஜி சி யால் வெளியிடப் பட்ட கொலை பட்டியல் சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பரபரப்பை ஏற்படுத்தி வரும் நிலையில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து தலைவர்கள் ஈரானின் கொலை பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் என்பது தான் மிக முக்கியமான விடயமாகும்.
இந்த கொலை பட்டியலில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் --பெஞ்சமின் நிதான்யாகு --- மெலோனி-- இம்மானுவேல் மே-க்ரான் ---கியாமர்-- ஜெர்மன் அதிபர் பெர்டிக் மெர்ஷால் ஆகியோர் பெயர் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ள-னர். இது தவிர இஸ்ரேல் கட்ஸ் --கிடி-யோன் ஷார் --- இயால் ஷமீர் --மார்க் ரூபியோ -- பீட் ஹெட்ஸ் -- மைக் குரில்லா -- மைக் ஹீக்பி உட்பட 13 பேர் லிஸ்ட் வெளியாகி பரபரப்பு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
பழி வாங்குவது எங்கள் தேசத்தின் கனவு இருந்தாலும் இவர்கள் தங்கள் வாழ்க்கையை அனுபவிக்க மாட்டார்கள் இவர்கள் இறுதி காலத்தில் நல்ல முறையில் மரணத்தை தழுவ வாய்ப்பு இல்லை என்று ஈரான் அறிவிப்பு செய்துள்ளது. இனி எப்போதும் அச்சுறுத்தல் கீழ் தான் இனி வாழ்க்கையை நகர்த்த முடியும் என்கிற இக்கட்டான சூழ்நிலையில் சர்வதேச நாடுகள் தங்கள் நாட்டின் தலைவர்கள் பாதுகாப்பை பலப்படுத்த பல்வேறு கட்ட நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.
இந்த நிலையில் அமெரிக்கா போரின் உக்கிரமான தாக்குதலை முன்னெடு த்துச் செல்லும் வகையில் மிக தீவிரமான தாக்குதலை நடத்தி வரும் நிலையில் இதன் தொடர்ச்சியாக ஈரானின் தென்மேற்கு நகரமான அஹ்வாஸூக்கு அருகே அமெரிக்க வான்வழித் தாக்குதல்கள் நடத்தப் பட்டதைத் தொடர்ந்து, கீமோதெரபி சிகிச்சை பெற்று வந்த குழந்தைகள் உட்பட 211 நோயாளிகள் வெளியேற்றப் பட்டதால், அங்குள்ள புற்றுநோய் மருத்துவமனை தற்காலிகமாகச் செயலிழந்ததாக ஈரானிய அரசு தெரிவித்துள்ளது.புதன்கிழமை பிற்பகுதியில் நடந்த இந்தத் தாக்குதல்கள், குசெஸ்தான் மாகாணத்தில் உள்ள புற்றுநோயியல் சிறப்பு மையமான ஷாஹித் பகாயி மருத்துவமனைக்கு அருகிலுள்ள பகுதிகளைக் குறிவைத்தன. இந்த வெடிப்புகளால் ஏற்பட்ட அதிர்வலை கள் அந்த மருத்துவமனையைப் பாதித்ததால், அதிகாரிகள் நோயாளிகளை மற்ற மருத்துவ மையங்களுக்கு மாற்றினர்.நோயாளி களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக" இந்த வெளியேற்றம் மேற்கொள்ளப் பட்டதாகவும், மருத்துவமனை தற்காலிகமாகச் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஈரானின் அரசுக்குச் சொந்தமான ஐஆர்என்ஏ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. உயிரிழப்புகள் எதுவும் பதிவாக வில்லை.
அஹ்வாஸில் உள்ள குழந்தைகள் புற்றுநோய் மருத்துவமனை அருகே அமெரிக்கா நடத்திய தாக்குதலை "மிருகத்தனமான போர்க்குற்றம்" என்று ஈரான் வெளியுறவு அமைச்சகம் கண்டித்துள்ளது. மேலும், இந்தத் தாக்குதலால் கீமோதெரபி சிகிச்சை பெற்று வந்த 211 நோயாளிகள் அவசரமாக வெளியேற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும் கூறியுள்ளது.
இதேவேளை பந்தர் அப்பாஸ் துறைமுகம் மற்றும் சபாஹர் துறைமுகம் தாக்குதல் உள்ளாகி இருக்கும் நிலையில் அமெரிக்கா தனது தாக்குதலை வலிமை படுத்தி வரும் நிலை காணப்படுகிறது. ஈரான் பொருளாதார சிக்கலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.
கார்க் தீவில் உள்ள சுற்று பகுதியில் சுற்றி தாககூதலை அமெரிக்கா நடத்தி வருகின்றனர். அமெரிக்கா இந்த முறை தெஹ்ரான் போன்ற மக்கள் வாழ்கின்ற இடங்களில் தாக்கவில்லை. மாறாக ஈரான் ராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கடுமையாக தாக்குதல் நடத்தி வருவதை காண முடிகிறது. இதன் மூலம் பலம் இழக்க செய்து விட்டு அடுத்த கட்ட நகர்வுகள் முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்று அமெரிக்கா திட்டம் தீட்டி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.ஈரான் உணவு விநியோக சேவைகள் மையம் வரை தாக்குதல் நடத்தி வரும் நிலை காணப்படுகிறது.
தற்போது நிலையில் அணு ஆயுத சோதனை மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் பின்னுக்கு தள்ளப்பட்ட நிலையில் ஹெர்மூஸ் ஜலசந்தியை ஈரானின் கைகளில் ஒப்படைக்க அமெரிக்கா அனுமதியளிக்க மறுப்பு தெரிவித்து வரும் நிலையில் இதன் மூலம் ஈரானில் மிகப் பெரிய அளவில் ஆன பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் என்பதால் அமெரிக்கா மிகவும் பதட்டம் நிலவும் சூழலில் இந்த போரைத் உக்கிரமான நிலையில் நடத்தி வருவதே இன்றைய யதார்த்தமான நிலையாகும்.
அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சென்ட் சபையிடம் அமெரிக்கா போரைத் துவங்கி விட்டது என்று முறைப்படி அறிவிப்பு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது . இந்த நிலையில் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கா ராணுவ நிலைகள் முழுமையாக அழிக்கப்பட்டு வருகிறது. இதற்கு பழி வாங்கும் நோக்கில் அமெரிக்கா கடும் தாக்குதலை நடத்தி வருகிறது என்பதை யாதர்த்தமான நிலையாகும் அமெரிக்கா ஹெர்மூஸ் ஜலசந்தி முழுமையாக திறந்து இருக்கும் என்று கூறி உள்ளது குறிப்பிடத்தக்கது. ஈரான் ஆதரவு கப்பல்கள் மட்டும் தாக்கப்படும் என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஹெர்மூஸ் ஜலசந்தி தாங்கள் தான் நிர்வாகம் செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.
அமெரிக்கா தொடர்ந்து போர் செய்ய காரணம் என்ன?
ஈரானில் உள்நாட்டு மக்கள் இடையே குழப்பம் விளைவிக்கும் வகையில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் இணைந்து பல்வேறு ரகசிய திட்டங்களை வகுத்து வருகின்றனர் . இந்த நிலையில் ஹெர்மூஸ் ஜலசந்தியை ஈரானின் கைகளில் வந்தால் ராய்ட்டர்ஸ் கருத்து கணிப்பு 120 பில்லியன் தொகையைக் ஆண்டுக்கு வருமானம் கிடைக்கும் என்றும், ஆக்ஸ்போர்டு கருத்து கணிப்பு -- 80 பில்லியன் அமெரிக்க டாலர் வரை இலாபம் பெறலாம் என்றும், மோர்கன் வங்கி -- 70--90 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பணத்தை வசூல் செய்ய முடியும் என்று கூறி உள்ளது குறிப்பிடத்தக்கது .இந்த தொகை ஈரான் எண்ணெய் வியாபாரம் வரும் வருவாய் விட அதிகமாக இருக்கும் என்று அந்த வங்கி தெரிவித்துள்ளது.
இது போன்ற இக்கட்டான சூழ்நிலையில் சமாதானம் என்பது காணல் நீர் போன்ற ஒன்றாகவே உள்ளது என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும் .....!!

அருவிக்கரை இலக்கியம் பேசும்



நாச்சியாரீவு பர்வீன்

# "ஹபீபி" கடையநல்லூரிலிருந்து கிழக்கிலங்கை வரை ஒரு பண்பாட்டுப் பாலம்

தமிழகத்தில் வெளியாகி, இருபத்தைந்து நாட்களுக்கும் மேலாக வெற்றிகரமாகத் திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் இயக்குநர் மீரா கதிரவன் இயக்கிய "ஹபீபி" திரைப்படத்தைப் பார்க்கும் வாய்ப்பு நேற்று எனக்குக் கிடைத்தது.

திரைப்படம் வெளியான முதல்நாளிலிருந்தே அதற்குக் கிடைத்த நேர்மறையான விமர்சனங்களும், ரசிகர்களின் பேராதரவும் என் கவனத்தை ஈர்த்திருந்தன. இந்தப் படத்தை நானும் பார்க்க வேண்டும் என்ற ஆவல் நீண்ட நாட்களாக மனதில் இருந்தது. அந்த ஆவல் நேற்று நிறைவேறியது.

இத்திரைப்படத்தின் இலங்கைச் சிறப்புக் காட்சியில் கலந்துகொள்வதற்காக இயக்குநர் மீரா கதிரவன் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தார். "அவள் பெயர் தமிழரசி", "விழித்திரு" போன்ற படைப்புகளால் தனித்துவமான இயக்குநராகத் தன்னை நிலைநிறுத்தியுள்ள அவருக்கு, "ஹபீபி" அவரது திரைப்பயணத்தில் மறக்க முடியாத ஒரு மைல்கல்லாக அமையும் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை.

இத்திரைப்படத்தின் இலங்கைச் சிறப்புக் காட்சியில் கலந்துகொள்ளுமாறு நண்பரும் இயக்குநருமான மீரா கதிரவன் என்னை அன்புடன் அழைத்திருந்தார். அதேபோல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அவர்களும் பொத்துவிலில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது என்னை நேரில் அழைத்திருந்தார். நண்பரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முஸாரப்புடன் இணைந்து கல்முனைக்குச் சென்று திரைப்படத்தைப் பார்த்தேன்.

இந்தச் சிறப்புக் காட்சியை முன்னிட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகு ஊடக நண்பர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த நண்பர்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு நல்ல திரைப்படம் மக்களை மட்டுமல்ல, மனிதர்களையும் மீண்டும் ஒன்றிணைக்கிறது என்பதை அந்த மாலை எனக்கு உணர்த்தியது.

"ஹபீபி" திரைப்படம் தமிழகத்தின் கடையநல்லூர் முஸ்லிம் மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கும் இலங்கையின் தென்கிழக்குக் கரைக்கும் வரலாறு, மொழி, வணிகம், உறவுமுறை, பண்பாடு ஆகியவற்றின் வழியாக நூற்றாண்டுகளைக் கடந்த உறவு இருந்து வந்துள்ளது. அதனால்தான் இந்தப் படத்தைப் பார்க்கும்போது கதை நிகழும் இடங்கள், மக்களின் பேச்சுவழக்கு, உடை, குடும்ப உறவுகள், சமூக வாழ்வு அனைத்தும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தை, குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களின் வாழ்வியலை, என் கண்முன் நிறுத்தின. பல காட்சிகளில் நம் ஊரில் நடந்த சம்பவங்களையே திரையில் காண்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

இந்தப் படத்தைப் பார்த்தபோது எனக்கு நினைவுக்கு வந்தது தேசிய விருது பெற்ற மறைந்த எழுத்தாளர் ஜ/னைதா ஷரீஃப் அவர்களின் "சாணைக் கூறை" நாவல்தான். கிழக்கிலங்கை முஸ்லிம் சமூகத்தின் வாழ்க்கை, மரபு, பெண்களின் நிலை, சமூக மாற்றத்தின் அவசியம் ஆகியவற்றை ஆழமாகப் பதிவு செய்த அந்த நாவல், இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் முக்கியமான சமூக ஆவணங்களில் ஒன்றாகும்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த நாவலை வாசித்தபோது, பல இடங்களில் நான் கண்கலங்கியிருக்கிறேன். அதே உணர்வை "ஹபீபி" திரைப்படமும் மீண்டும் எனக்குள் உயிர்ப்பித்தது. ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதை விட, ஒரு நல்ல நாவலை வாசிப்பது போன்ற அனுபவத்தை அது அளித்தது. பல காட்சிகள் மனதை ஆழமாகத் தொட்டன் சில காட்சிகள் கண்களைக் கலங்கச் செய்தன. திரை இறங்கிய பின்னரும் அந்தக் கதாபாத்திரங்கள் மனதிலிருந்து அகலவில்லை. அதுவே ஒரு படைப்பின் வெற்றி.

இந்தத் திரைப்படத்தின் மிகப் பெரிய பலம் அதன் நேர்மையான கதைச் சொல்லல். எந்தவித செயற்கையான நாடகத்தனத்திற்கும் இடமளிக்காமல், வாழ்க்கையை வாழ்க்கையாகவே பதிவு செய்ய முயன்றிருக்கிறார் இயக்குநர் மீரா கதிரவன். அதனால்தான் திரையில் தோன்றும் ஒவ்வொரு கதாபாத்திரமும் நமக்குத் தெரிந்த மனிதர்களாகவே உணரப்படுகின்றனர்.

ஒவ்வொரு கதாபாத்திரமும் மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பேசும் மொழி, உடை, உடல்மொழி, குடும்ப உறவுகள், அன்றாட வாழ்வியல் எதுவும் மிகையாகவோ, செயற்கையாகவோ தோன்றவில்லை. ஒரு சமூகத்தின் ஆன்மாவை அதன் இயல்பான வடிவில் பதிவு செய்வதற்கு இயக்குநர் மேற்கொண்டுள்ள ஆய்வும் அர்ப்பணிப்பும் ஒவ்வொரு காட்சியிலும் வெளிப்படுகிறது.

இந்தப் படத்தில் நடித்திருக்கும் பலர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால், அவர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட கதாபாத்திரங்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். நடிகர் கஸ்தூரி ராஜா, யூசுப் என்ற பாத்திரத்தில் தனது நீண்டகால அனுபவத்தை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். அறிமுக நடிகர்களான ஈஸா, மாளவிகா மனோஜ், தனஸ்ரீ சுதாகரன் ஆகியோரும் தங்களது பாத்திரங்களை முழு நம்பகத்தன்மையுடன் சுமந்திருக்கிறார்கள். துணைக் கதாபாத்திரங்களுக்குக் கூட கதையின் ஓட்டத்தில் தனித்துவமான முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

இந்தத் திரைப்படத்தின் மற்றுமொரு சிறப்பு ஒளிப்பதிவாளர் மகேஷ் முத்துசுவாமியின்

**பொத்துவில் அஸ்மின்**

காட்சிப்படுத்தலாகும். அவர் பதிவு செய்திருப்பது வெறும் காட்சிகள் அல்ல் ஒவ்வொரு ஃபிரேமும் ஒரு கவிதை, தெருக்கள், வீடுகள், நெசவுக் கூடங்கள், மக்களின் அன்றாட வாழ்க்கை, இவை அனைத்தும் பார்வையாளரை அந்த மண்ணுக்குள்ளேயே அழைத்துச் செல்கின்றன. பல காட்சிகளில் ஒளிப்பதிவு பேசுகிறது வசனங்கள் தேவையில்லாத அளவுக்கு காட்சிகளே உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

ஒரு காலத்தில் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் மிகவும் பிரபலமாக ஒலித்த "கப்பலுக்குப் போன மச்சான்" என்ற பாடல் திரைப்படத்தில் மிகப் பொருத்தமான இடத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. டி. கே. ராமமூர்த்தியின் இசையில், மறைந்த கவிஞர் நாகூர் சலீம் எழுத, காயல் ஷேக் முகம்மது மற்றும் பி. வசந்தா பாடிய காலத்தால் அழியாத அந்தப் பாடல், திரைப்படத்தின் காலப்பின்னணியையும், அந்தத் தலைமுறையின் வாழ்க்கை நினைவுகளையும் மீண்டும் உயிர்ப்பிக்கிறது. அந்தப் பாடல் ஒலித்த தருணத்தில், ஒரு தலைமுறையின் நினைவுகளே திரையரங்கில் மீண்டும் உயிர்த்தெழுந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. கவிஞர் நாகூர் சலீம் அவர்கள் இன்று உயிருடன் இருந்திருந்தால், தனது பாடல் இவ்வளவு அழகாக மீண்டும் மக்களிடம் சென்றடைந்திருப்பதைப் பார்த்து




மகிழ்ந்திருப்பார்.

திரைப்படத்தின் வசனங்கள் இயல்பாகவும் உயிரோட்டமாகவும் அமைந்துள்ளன. கதையாசிரியர் வி. எஸ். முகம்மது அமீன் அவர்கள் வாழ்ந்த மனிதர்களின் மொழியையே வசனங்களாக மாற்றியிருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. எந்த வசனமும் செயற்கையாகவோ, மேடைப் பேச்சைப் போலவோ தோன்றவில்லை.

இசையமைப்பாளர் சி. சாம்ஸ் திரைப்படத்திற்கு இசையமைத்ததோடு மட்டுமல்லாமல், அதன் உணர்வுகளுக்கு உயிஷரூட்டியிருக்கிறார். பின்னணி இசை எந்தக் காட்சியையும் மீறி ஆதிக்கம் செலுத்தாமல், கதையின் உணர்வுகளை மென்மையாகத் தாங்கிச் செல்கிறது. பாடலாசிரியர்கள் யுகபாரதி மற்றும் மஹ்ஷூத் ரஹ்மான் எழுதிய பாடல்களும் திரைப்படத்தின் உணர்வுப் பயணத்தை மேலும் ஆழமாக்குகின்றன.

தமிழ் சினிமாவின் நீண்ட வரலாற்றில் முஸ்லிம் சமூகத்தின் வாழ்க்கை மிகக் குறைவாகவே உண்மைத்தன்மையுடன் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சில திரைப்படங்களில் அவர்கள் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் மட்டுமே சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பின்னணியில், முஸ்லிம் சமூகத்தின் குடும்ப வாழ்க்கை, கலாச்சாரம், அன்பு, உறவுகள், நம்பிக்கைகள் மற்றும் அன்றாட வாழ்வியலை எந்த மிகைப்படுத்தலும் இல்லாமல், மிகுந்த மரியாதையுடனும் நேர்மையுடனும் பதிவு செய்திருப்பது "ஹபீபி" திரைப்படத்தின் மிகப் பெரிய வெற்றியாக நான் கருதுகிறேன்.

இந்தப் படம் முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய ஒரு திரைப்படம் மட்டுமல்ல் மனிதர்களைப் பற்றிய திரைப்படம். அன்பு, குடும்பம், தியாகம், உறவுகள், நினைவுகள், பண்பாடு, இவை அனைத்தையும் இணைக்கும் மனிதநேயப் படைப்பாக இது உருவாகியுள்ளது.

திரைப்படம் நிறைவடைந்தபோது, ஒரு நல்ல திரைப்படத்தைப் பார்த்த திருப்தி மட்டுமல்ல, ஒரு சமூகத்தின் வாழ்வியலை மீண்டும் சந்தித்த மகிழ்ச்சியும் எனக்குள் இருந்தது. அந்த மாலை திரையரங்கில் இருந்த பெரும்பாலானோரின் முகங்களிலும் அதே நிறைவை நான் காண முடிந்தது.

தமிழகத்தில் வெளியான திரைப்படங்களில், முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியல், குடும்ப உறவுகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை இயல்பாகவும் நெருக்கமாகவும் சித்தரிக்கும் முயற்சிகள் மிகவும் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. அந்த வகையில், இயக்குநர் அனீஸ் இயக்கிய "திருமணம் என்னும் நிக்காஹ்" திரைப்படம், முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியலை ஓரளவு திரையில் பதிவு செய்த குறிப்பிடத்தக்க படைப்பாக அமைந்தது. அதேபோல், இயக்குநர் அனீஸின் மேற்பார்வையில், நடிகை ராதிகாவின் Radaan Media works நிறுவனம் தயாரித்து, கலர்ஸ் தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான "ஜமீலா" தொலைக்காட்சித் தொடர், தமிழகத்தில் முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியலை மையமாகக் கொண்டு உருவான முதல் தொலைக் காட்சித் தொடர்களில் ஒன்றாகக் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றது. அந்தத் தொடரில் இசையமைப்பாளர் ரிஸ்வானின் இசையில் இடம்பெற்ற மூன்று பாடல்களை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என் படைப்புப் பயணத்தின் மறக்க முடியாத அனுபவங்களில் ஒன்றாகும்.

அந்த வரிசையில் பார்க்கும் போது, இயக்குநர் மீரா கதிரவன் இயக்கிய "ஹபீபி" திரைப்படம், தமிழ்நாட்டு முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியல், பண்பாடு, குடும்ப உறவுகள், மரபுகள் மற்றும் சமூக உணர்வுகளை முழுமையான திரைப்பட மொழியில் மையப்படுத்திய குறிப்பிடத்தக்க படைப்பாகத் திகழ்கிறது. இந்தப் படம் ஒரு திரைப்படம் மட்டுமல்ல் ஒரு சமூகத்தின் வாழ்வியலை அதன் இயல்பான நிறங்களுடன் பதிவு செய்திருக்கும் பண்பாட்டு ஆவணமாகவும் விளங்குகிறது.

இன்றைய இளம் தலைமுறையினர், தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையையும், சமூக மரபுகளையும், பண்பாட்டு வேர்களையும் முழுமையாக அறிந்திருக்க வாய்ப்பு குறைவு. அந்தப் பின்னணியில், "ஹபீபி" போன்ற திரைப்படங்கள் ஒரு தலைமுறையின் நினைவுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் காட்சிப் பதிவுகளாக மாறுகின்றன. அதனால்தான் இத்தகைய திரைப்படங்கள் வெற்றி பெற வேண்டும் அவை கொண்டாடப்பட வேண்டும்.

இப்படம் இலங்கையின் பல திரையரங்குகளிலும் வெற்றிகரமாகத் திரையிடப்பட்டு வருகிறது. கிழக்கு மாகாண மக்களும், இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ் திரைப்பட ரசிகர்களும் குடும்பத்துடன் சென்று இந்தப் படத்தைத் திரையரங்குகளில் கண்டுகளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2026 ஆம் ஆண்டின் முக்கியமான தமிழ் திரைப்படங்களில் ஒன்றாக "ஹபீபி" நினைவுகூரப்படும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. இயக்குநர் மீரா கதிரவன் அவர்களுக்கும், தயாரிப்புக் குழுவினருக்கும், நடிகர்-நடிகைகளுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் எனது இதயப்பூர்வமான வாழ்த்துகள்.

"ஹபீபி" திரைப்படம், இயக்குநர் மீரா கதிரவனின் திரைப்பயணத்தில் ஒரு மைல் கல்லாக மட்டுமல்லாமல், தமிழ்ச் சினிமாவில் முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியலை மரியாதையுடனும் உண்மைத்தன்மையுடனும் பதிவு செய்த முக்கியமான படைப்பாகவும் நிலைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

"ஹபீபி" தவறவிடக் கூடாத திரைப்படம். குடும்பத்துடன் சென்று பாருங்கள். நீங்கள் ஒரு திரைப்படத்தை மட்டுமல்ல, நம் வாழ்வியலின் நினைவுகளையும், நம் பண்பாட்டின் வாசனையையும், மனித உறவுகளின் வெப்பத்தையும் திரையில் உணரப் போகிறீர்கள்.

## படத்திற்கேற்ற கவிதை "காட்சியும் கவிதையும் - 1"

01)

பாறை நசுக்கிப் பாழ்படுத்த நினைத்தாலும்
பசுமை உரம் கொண்டெழும் வீரமரம்

முட்டியெதிர் திசையில் கிளை பரப்பும்
முகங்கொடுத்து முன்னிலையில்
பார்க்கப் புன்னகைக்கும்

அடக்குமுறை கடக்கும் முறை இதுவென்று
அனைவருக்கும் அது பாடம் உரைக்கும்

**பஸ்லா பர்ஸான்**
**காத்தான்குடி**

02)

மூழ்கச் செய்தவன் முன்னாலே வேர் பிடித்து..
முடக்க நினைத்தவனின் மார்பில் கால்பதித்து..
முறைத்துப் பார்த்தவனின் முகத்தில்
கிளை விரித்து..
எதிரியும் வீழ்ந்து விடாமல் தன்முதுகுதனை
வளைத்து..
பணிவோடு வளர்கிறது அந்த ஒற்றை
விருட்சம்...!!!

**அனஸ்பரீட்**
**கல்ஹின்னை.**

03)

கல்லையும் தள்ளும் விதை
கனவும் நனவாகும் நினை
துணிதலுக் கேது தடை
தொடர்ந்தால் கிடைக்கும் விடை
அயர்வை தினம் உடை
அதிரும் எதிரிப் படை...

**நுஸ்ரா லியாகத் அலி**
**தர்கா நகர்.**

04.

பெண்ணாகி...
வளைந்து போவதாலேயே
தாங்கி நிற்க முடிகிறது,
தாய்மையால்.
குடும்பத்தின் ஆணிவேராகி,
அடிக்கிற திசையெல்லாம்
ஈடு கொடுத்தாலும்,
சுமை மட்டும் இறங்காது.

**மஷ்றா**
**சம்மாந்துறை.**

05.

கற்பாறையின் இடுக்கிலும்
வேரூன்றி...
கால் பதித்து
காற்றுக்காய்ப் போராடி...
தலைநிமிர்ந்து
நிற்கத் துடிக்கிறது செடி!

**பயாஸா பர்வீன்.**
**பலகத்துறை.**

06

**நம்பிக்கை**

பூமி விதைத்த பாறையின்
அருகில்
புதிதாக வேரூன்றி நிற்கிறது
எதிர்கால
நிழல் தரும் மரம்

**பானு ஜிப்ரி**
**சாய்ந்தமருது**

07.

புயலிலும் புன்னகைக்கும்
பூகம்பத்தில் நிமிர்ந்து நிற்கும்
தடைகளை தகர்த்து
உயிர்த்தெழும் மரம்

**பாத்திமா சுமையா**
**குருநாகல்**

## காட்சியும் கவிதையும் - 02



**கீழே தரப்பட்டுள்ள படத்திற்கு சுருக்கமான ஒரு கவிதையை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம். சிறந்த கவிதைகள் பிரசுரிக்கப்படும். கவிதை எழுதுகின்றவர்கள் கட்டாயம் உங்களது பெயரினை குறிப்பிட தவற வேண்டாம். கவிதைகள் அனுப்பவேண்டிய Whats app இல. 0767877876.**

## கொக்குகள்

ஒய்யாரமாய் நடப்பவைதான்
கொக்குகள்.
உயரமும் மிடுக்கும்
கூடவே பிறந்ததால்,
பெண் குழந்தைகளுக்கும்,
பிடித்துத்தான் போகிறது.

வெள்ளை போர்த்திய,
இந்தக் கொக்குகளின்
அகம் பற்றி,
யாருக்கும் புரிவதில்லை .

கலக்கலான சிறகசைப்பும்
அலகின் அழகும்,
தலை கெழித்த பார்வையும்,
யாருக்குத்தான் பிடிக்காது !

மாமா முறை கொண்டாடவும்,
அண்ணா அப்பா
தாத்தா சிற்றப்பா,
அத்தனை உறவு முறைகளையும்
கொண்டாடித் தீர்க்கின்றன குழந்தைகள்.

இந்தக் கொக்குகளின் கவனம்
பெண் குழந்தைகளின் மீதுதானென்பதை,
கண்டுபிடிக்கவொரு
கருவியிருக்கிறதா ?

**சம்மாந்துறை ம/றா.**
**மருதமுனை.**

# மனநலமும் ஆலோசனையும்

105



# கேள்வி? பதில்!

**கேள்வி...**

தன் சாதனைகளை சொல்வதில்..
தன் வணக்கங்களை எடுத்துக் காட்டுவதில்.....
என்னால்தான் முடியும் என்று உரத்துச் சொல்வதில்..
நல்லது செய்ய யாரையும் நாடத் தேவையில்லை என்று ஆலோசிக்காமல் முடிவெடுப்பதில்..
இப்படி பல விடயங்களை தன் மனப்படி சில தலைவர்கள் சொல்கிறார்கள், செய்கிறார்கள்....
இவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
மக்கள் இவர்களை எப்படி பார்க்கிறார்கள்?
இவர்கள் நிலை என்ன?

**பதில்....**

மிக ஆழமான கேள்வியொன்றை கேட்டுள்ளீர். உங்கள் கேள்விக்குள் இருந்தே பதில் தர முயற்சிக்கிறோம்.

ஆம்....
இப்படிப்பட்ட தலைவர்களை "நான்" என்ற ஒரே வார்த்தையால் ஆளும் தலைவர்கள் என்று சொல்லலாம்.

### இவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

இவர்கள் "அகங்கார தலைமை"யை சுமப்பவர்களாக இருப்பார்கள். தான் செய்தவற்றை அல்லது சாதித்ததாக, தான் கருதுபவற்றை விளம்பரப்படுத்துவார்கள். செய்த நல்லதை பல முறை சொல்வார்கள். ஆனால் செய்யாததை மறைப்பார்கள்.

அவர்கள் செய்யும் வணக்க வழிபாடுகளை கணக்கு காட்டுபவர்களாக இருப்பார்கள்: "நான் இவ்வளவு தொழுகிறேன், இவ்வளவு தர்மம் செய்கிறேன்" "இவ்வளவு நோன்பிருக்கிறேன்" என்று பட்டியல் போடுவார்கள். ஆனால் அந்த வணக்கம் அவர்களை பணிய வைக்காது.

"என்னால் மட்டும்தான்" என்று நினைப்பார்கள்: இவர்கள் கூட்டத்தை, கருத்தை, ஆலோசனையை மதிக்க மாட்டார்கள். "நானே போதும்" என்ற ஆணவம் இவர்களை அறியாமலே ஆதிக்கம் செலுத்தும்.

ஆலோசிக்காமல் முடிவெடுப்பார்கள்: "நல்லது செய்ய யாரையும் கேட்க தேவையில்லை" என்று சொல்வார்கள். ஆனால் அந்த நல்லதும் கூட பலருக்கு கெடுதலாக முடியும்.

சுருக்கமாக சொன்னால்: இவர்களிடம் பணிந்து போகும் தன்மையும் பக்குவமும் குறைவாகவே இருக்கும்.

மக்கள் இவர்களை எப்படி பார்கிறார்கள்? என்பது உங்களின் மற்றுமொறு கேள்வி....
ஆம்..! மக்கள் முதலில் பயந்து பாராட்டுவார்கள்.
பிறகு பழகி பார்த்து ஒதுங்குவார்கள்.
கடைசியில் மனதுக்குள் "இவரா?" என்று இரங்குவார்கள்.

ஏனெனில் மக்களுக்கு தேவை "தலைவர்" அல்ல. "தோழமையான தலைவர்".
"என்னால்" என்று சொல்பவரை விட "நம்மால்" என்று சொல்பவரைத்தான் மக்கள் நேசிகிறார்கள்.

### இவர்களின் நிலை என்ன?

இவர்களுக்கு...
1. தற்காலிக வெற்றி இருக்கும், நிரந்தர தோல்வி கிடைக்கும். அதிகாரம் இருக்கும் வரை பேரும் புகழும் இருக்கும். அதிகாரம் போனதும் யாரும் திரும்பி பார்க மாட்டார்கள்.

2. இவர்கள் ஆலோசிக்காமல் செயலாற்றுவதால் தவறு செய்வார்கள். தான் செய்த தவறுகளை கண்டும் காணமல் போய்விடுவார்கள். இவர்களின் தவறை சுட்டிக் காட்ட யாரும் அருகில் இருக்க மாட்டார்கள். கடைசியில் தனிமை இவர்களுக்கு நண்பனாகிவிடும்.
இவர்கள், தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை வைத்துக்கொள்வதில் தவறவிட்டிருப்பார்கள்..

3. இவர்களுக்கு வரலாற்றில் இடமிருக்காது.
உமர்(ரலி), அபூபக்கர்(ரலி) போன்றவர்கள் ஏன் நினைக்கப்படுகிறார்கள்? "நான்" என்று சொல்லாமல் "சமூகம்" என்று வாழ்ந்ததால். பெருமையை அகற்றி மற்றவர்களுடன் தாழ்ந்து போனதால், "பூமியில் பெருமையாக நடக்காதே" – அல்-இஸ்ரா 37 என்று அல்லாஹ் திரு குர்ஆனில் இது குறித்த எச்சரிப்பதை காணலாம்.

நாம் சிந்திக்க வேண்டிய முக்கியமான விடயம்...
சாதனையை சொல்லும் தலைவனை மக்கள் கேட்பார்கள்.
ஆனால் சாதனையை செய்ய வைக்கும் தலைவனை மக்கள் நேசிப்பார்கள்.
(உங்கள் கேள்விக்கான பதில் கிடைத்திருக்கும் என நினைக்கிறேன்...)



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---




**பயாஸா பாஸில்**

# சிறந்த தலைமைத்துவம்



தலைமைத்துவமானது, ஒரு குழு அல்லது அமைப்பை வழிநடத்துவதற்கான திறன் மற்றும் தகுதியைக் குறிக்கும். ஒரு நல்ல தலைவர் தனது குழுவினரை ஊக்குவித்து, வழிநடத்தி, அவர்களின் இலக்கினை அடையப் பின்பற்றும் கொள்கைகள் மற்றும் மதிப்புகளைக் குறிப்பிட வேண்டும். 'நான்கு இளைஞர்களை என்னிடம் கொடுங்கள். உலகையே மாற்றிக் காட்டுகிறேன்' என்றார் சுவாமி விபுலானந்தர் அடிகள். இத்தகைய, 'மனித ஆற்றலை நல்வழிப்படுத்தினால் ஒரு நாட்டின் தலையெழுத்தை மாற்றி எழுதலாம்' என்பதே உறுதி. 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. அவன் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே' என்னும் பாடல் வரியானது ஒரு மனிதனை நெறிப்படுத்தலில் பெற்றோரின் பங்களிப்பைத் தருகிறது. ஆகவே பெற்றோர்களும் குழந்தைகளை சிறுவயது முதல் நெறிப்படுத்த வேண்டும். நெறிப்படுத்தாத குழந்தை சிறந்தவனாக உருவாகுவது கடினமே.

பயிர் செழித்து வளர்வதற்கு அதனுடனான புற்பூண்டு மற்றும் களை என்பவற்றை எடுக்க வேண்டும் சமுதாயத்தை நல்வழியில் செயற்படுத்த நல்ல தலைமைத்துவம் இருத்தல் வேண்டும். நாட்டை வழிநடத்துபவன் தேசத் தலைவன், குடும்பத்தை வழிநடத்துபவன் குடும்பத் தலைவன் மற்றும் பள்ளிக் கல்லூரிகளில் மாணவ மாணவியரை வழிநடத்துபவன் மாணவத் தலைவன் என்கின்றோம். எனவே ஒருவன் தலைவனாக உருவாக வேண்டும் என்றால் அவன் தன்னை முழுவதுமாகப் புரிந்தவனாக, தன் மனதை அடக்கத் தெரிந்தவனாக மற்றும் தன் மீது முழுக் கட்டுப்பாட்டு உள்ளவனாக மாற வேண்டும். நல்ல தலைவன் சரியான புரிதலும், தீவிர பற்றுதலும், கொள்கைப் பிடிப்பும் ஆற்றலும் உள்ளவனாக இருந்தால் தான் 'அவர் யார்?' என்பது தெரிய வரும். தலைவனானவன், நல்ல தலைவனாவது சாதாரண விடயம் அல்ல.

அறிவு மட்டுமே ஒருவனைத் தலைவனாக்க முடியாது. அறிவும் அனுபவமும், சக மனிதர்களை மதித்து நடக்கும் பண்பும் கொண்டவரே தலைமைப் பண்புக்கு உரித்தானவர். மற்றவர்கள் முன் 'எல்லாம் எனக்குத் தான் முடியும்' என்று அதிகாரத்தை எடுத்துச் செயல்படுவது தலைமைக்கு அழகான பண்பல்ல. சிறந்த தலைவரானவர் பிறரது மனதில் தாக்கத்தை ஏற்படுத்தித் திறமையாக செயல்பட வைக்கும் ஆற்றல் உள்ளவராக இருக்க வேண்டும்.

திறமைகளைக் குழுவிடமிருந்து வெளிக் கொண்டு வரும் நபராக இருக்க வேண்டும். 'தலைமை' என்ற தலைக்கணத்தை வைத்து குழுவை மதிக்காமல் செயல்படும் ஒருவர் தலைமைத்துவத்தை செயல்படுத்தவும் அதனை வழிநடத்தவும் முடியாது. தலைவருக்கு மற்றவர்களை மதிக்கும் மனப்பாங்கு மற்றும் மரியாதை அளிக்கும் தன்மை கட்டாயம் இருக்க வேண்டும். அறிவாற்றல், நேர்மை, ஒழுக்கம், அனுபவம், கட்டுப்பாடு, மரியாதை கொடுத்தல், பேச்சுக்கு மதிப்பளித்தல், சுறுசுறுப்பு, மதிப்பீடு, உரையாடல், முடிவெடுக்கும் தன்மை, தொலைநோக்கு பார்வை, சுய உந்துதல், சிக்கலைத் தீர்க்கும் திறன், ஒத்துழைப்பு மற்றும் தொடர் முயற்சி ஆகிய அனைத்தும் ஒரு தலைவனுக்கு மிக அவசியமான பண்புகளாக இருக்கின்றன. அவசரத்தில் முடிவெடுப்பது, மற்றவர்களின் மனதை நோகடித்து செயல்படுவது மற்றும் குழுவின் திட்டங்களுக்கு செவி சாய்க்காமல் இருப்பது போன்றவை சிறந்த தலைமைத்துவப் பண்புகள் அல்ல. அந்த தலைமைத்துவம், குழுவிற்கு அவசியமான ஒன்றல்ல. பாடசாலை அதிபர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பதால் தான் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருக்கின்றனர். அவ்வாறு மாணவர்களையும் தலைமைப் பொறுப்பை ஏற்க வைத்து சமூகத்தில் சிறந்தவர்களாக உருவாக்குவதில் இவர்களும் பங்கு வகிக்கின்றனர். இதனால் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக மாணவர்கள் உருவாகுவதை நாம் காணலாம். தொலைநோக்குப் பார்வை என்றுமே தலைமைக்கு அவசியமான ஒன்றாகும். தலைமைத்துவத்தில் எப்போதும் நிதானம் தவறாமல் இருப்பதே மிக மிக முக்கியமாகின்றது.

தோல்விக்கு என் குழு தான் காரணம் என்று நினைக்கும் தலைவன் சிறந்த தலைவனாக முடியாது. என்ன நடந்தாலும் தன் குழுவை விட்டுக் கொடுக்காமல் குறை சொல்லாமல் இருப்பவனே என்றும் உயரத்தில் இருப்பான். அவனுக்கு வெற்றி நிச்சயம் உண்டு. ஏதேனும் பிரச்சனைகள் தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் மீண்டும் எதிர்கால சிந்தனையுடன் முன்னேற்றப் பாதைக்கு என்ன செய்வது என்று சிந்தித்து செயற்படுவதே சிறந்தது. எப்போதும் தலைமைத்துவத்தில் பொறுமை மிக அவசியம். தலைவனுக்கு அஞ்சி, அவனுக்கு கட்டுப்பட்டு செயல்படும் குழு என்றுமே சுதந்திரமற்றதாகவே காணப்படும். எனவே எப்போதும் குழுவுக்கு பேச்சு சுதந்திரத்தை தலைமைத்துவம் வழங்க வேண்டும். அப்போது குழுவின் பேச்சினால் அவர்களின் எண்ணங்கள் வெளியிடப்படும். அவற்றில் நல்லவை எது கெட்டவை எது என்று தீர்மானித்து, அதற்கமைய தனது செயல்பாட்டினை கொண்டு செல்ல தலைமை முயற்சிக்க வேண்டும்.

எப்போதும் ஒற்றுமையுடன் இருப்பது அந்த நிர்வாகத்துக்கு எப்போதுமே ஒரு பக்க பலமாகின்றது. எனவே ஒரு நிர்வாகம் ஒரு குடும்பம் சிறந்ததாக அமைய வேண்டும் என்றால், அதற்குத் தலைமையின் பங்களிப்பு மிக மிக அவசியமாகின்றது.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது போல சிறந்த தலைமை இல்லை என்றால் அந்த நாடே சீரழிந்து விடும்.

எனவே, சீரான பாதையில் செல்ல வேண்டும் என்றால் அதற்கு அடித்தளம் சிறந்த தலைமைத்துவம். அத்துடன் ஒரு தலைவன் சிறந்த மனப்போக்கையும் உருவாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். 'என்னைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் உள்ள உலகத்தை என்னால் மாற்ற முடியாமல் போகலாம் ஆனால் எனக்குள் இருக்கும் உலகத்தை, நான் பார்க்கும் விதத்தை என்னால் மாற்ற முடியும்' என்ற தன்னம்பிக்கை தலைமைக்கு இருக்க வேண்டும்.

தலைமைத்துவத்தின் சிறந்த சொத்து மக்கள் என்றே கூற வேண்டும். மக்களை வென்றவனே அனைத்தையும் வென்றவனாகி விடுவான்.

நீங்கள் மக்களைப் பற்றி எவ்வளவு அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளும் வரை, உங்களுக்கு எவ்வளவு விஷயங்கள் தெரியும் என்பதைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இருக்கப் போவதில்லை.

எனவே எப்போதும் தலைவன் தனது குழுவிடம் பொறுப்புள்ளவனாக நடந்து கொள்வதோடு, சக உறுப்பினர்களின் சிறந்த பங்காற்றலுக்கு பாராட்டுகளையும் வழங்க வேண்டும்.

அப்போது தான் அவர்கள் தலைமையுடன் ஒன்றிணைந்து செயல்பட்டு, தனது நிர்வாகத்துக்கு விசுவாசம் உள்ளவர்களாக இருக்க முயற்சி செய்வார்கள்.

சுவாசிக்க மூச்சு எவ்வளவு முக்கியமோ, அதுபோல சீரான நிர்வாகத்தை எடுத்துச் செல்வதற்கு அதில் உள்ள உறுப்பினர்கள், செயல்பாட்டாளர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு மிக மிக அவசியமாகின்றது.

எப்போதும் தலைவன் இடம் 'நான்' என்ற அகங்காரம் இருக்கவே கூடாது. என்றுமே 'நாங்கள்' என்ற கூட்டணி இருக்க வேண்டும். 'நான் அன்பு செலுத்துவேன், பிறரையும் உயர்த்துவேன்' என்ற கொள்கை இருக்குமானால் அந்தத் தலைமை எப்போதும் சிறந்த தலைமையாக இருக்கும்.

'பிறரைக் கொண்டு ஒரு வேலையை செய்து முடிப்பது ஒரு மேலாளரின் சாதனை. சிறப்பாக வேலை செய்வதற்கு மற்றவர்களுக்கு உத்வேகமூட்டுவது ஒரு தலைவரின் சாதனை.'

Write by..
A M. Murshidha Begum
Akurana
Kandy

# வெகு விமரிசையாக இடம்பெற்ற கஹட்டோவிட்ட ஹிஜ்ரா மாவத்தையின் திறப்பு விழா நிகழ்வு



கஹட்டோவிட்ட பிரதேச மக்களின் 15 ஆண்டுகால நீண்டகாலக் கனவாக இருந்த ஹிஜ்ரா மாவத்தை பாதை முழுமையாகக் கொங்றீட் இடப்பட்டு, 17ஆம் திகதி மக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் ஒன்றரை தசாப்த காலமாக இப்பாதையைச் செப்பனிடுவதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும், அவை கைகூடாமல் இருந்து வந்தன. இந்நிலையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழுள்ள அத்தனகல்ல பிரதேச சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ், இப்பாதை மிகவும் தரமான முறையிலும் நேர்த்தியாகவும் கொங்றீட் இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தல்களின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், கஹட்டோவிட்ட வட்டார சபையின் உப தலைவரும், மக்கள் விடுதலை முன்னணியின் மூத்த உறுப்பினருமான அல் ஹாஜ் ஹிசாம் அவர்களின் நேரடி முயற்சியில் இப்பணி முன்னெடுக்கப்பட்டது.

இப்பாதைப் புனரமைப்புப் பணியானது, கஹட்டோவிட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் மொஹம்மத் ஜவாத் அவர்களின் ஒருங்கிணைப்பிலும், அத்தனகல்ல பிரதேச சபை உறுப்பினர் மொஹம்மத் இன்சாப் அவர்களின் வேண்டுகோளின் பேரிலும் ஆரம்பிக்கப்பட்டது. சமய விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் முனீர் முழப்பர் அவர்களின் வழிகாட்டல், அத்தனகல்ல அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான ருவன் மாபளகம அவர்களின் ஆலோசனை, அத்தனகல்ல தொகுதி என்.பி.பி அமைப்பாளர் புபுது க புருகேவின் ஒத்துழைப்பு மற்றும் அத்தனகல்ல பிரதேச சபை தலைவர் தர்ஷன விஜேசிங்க அவர்களின் நிதியொது க்கீடு ஆகியவற்றின் மூலம் இந்த அபிவிருத்தித் திட்டம் மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இப்பாதையின் உத்தியோகபூர்வ திறப்பு விழாவில் சமய விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் முனீர் முழப்பர், பாராளுமன்ற உறுப்பினர் ருவன் மாபளகம, தொகுதி அமைப்பாளர் புபுது கபுருகே, பிரதேச சபைத்தலைவர் தர்ஷன விஜேசிங்க, பிரதேச சபை உறுப்பினர் மொஹம்மத் இன்சாப், வட்டார சபைத்தலைவர் மொஹம்மத் ஜவாத் மற்றும் உப தலைவர் அல் ஹாஜ் ஹிசாம் உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்களும், ஊர்ப் பிரமுகர்களும், ஹிஜ்ரா மாவத்தை பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நீண்ட காலமாகப் போக்குவரத்து சிரமங்களை எதிர்கொண்டு வந்த மக்கு, இப்பாதையை அழகிய முறையில் புனரமைத்துக் கொடுத்தமைக்காக பிரதேச சபை உறுப்பினர் மொஹம்மத் இன்சாப், பிரதேச சபைத்தலைவர் தர்சன விஜேசிங்க மற்றும் அரச அதிகாரிகளுக்கும், அத்தனகல்ல பிரதேச சபைக்கும் கஹட்டோவிட்ட மற்றும் ஹிஜ்ரா மாவத்தை வாழ் பொதுமக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# புற்றுநோய் பராமரிப்பு நிலையத்தில் காய பராமரிப்பு மையம் திறப்பு



**(பாரா தாஹிர்)**

ஏறாவூர் கிழக்கு புற்றுநோய் பராமரிப்பு நிலையத்தில், காய பராமரிப்பு மையம் ஒன்று, அதன் நிறுவனரும், தவிசாளரும், சமூக சேவையாளருமான எஸ். எல். எம். பௌஸ் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக காத்தான்குடி ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.டஎஸ்.எம். ஜாபிர், விஷேட வைத்திய நிபுணர் டாக்டர் பிர்னாஸ், டாக்டர் எம். எஸ். எம்.நுசைர், பெண் மருத்துவ நிபுணர் டாக்டர் பைசல்,அக்பர், உடலியக்க மருத்துவ நிபுணர் ஏ.ஏ.ஏ.சாதிக், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் தாஹிரா சைபுதீன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் முக்கிய அம்சங்களாக மருத்துவ ஆலோசனை அறையை தவிசாளர் எஸ். எல். எம்.பௌஸ் அவர்களாலும், நவீன மற்றும் சிறந்த காய கட்டு அறையை வைத்திய அத்தியட்சகர் ஜாபிர் அவர்களாலும் திறந்து வைக்கப் பட்டது.

மேலும் இந் நிலையத்தில் தொடர்ச்சியான மனிதாபிமான சேவைகள் மற்றும் நோயாளர்க ளுக்கான மேம்படுத்தப்பட்ட பராமரிப்பு நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் களும் இடம் பெற்றன.

# சோஷியல் டிவி மீடியா நெட்வொர்க்கின் 6ஆம் ஆண்டு நிறைவு விழா





**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சோஷியல் டிவி மீடியா நெட்வொர்க் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் 6ஆம் ஆண்டு நிறைவு விழா (11) நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் (ACMC) தேசிய அமைப்பாளருமான அஷ்ரப் தாஹிர் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக நிந்தவூர் பிரதேச சபைத் தலைவர் சட்டத்தரணி ரியாஸ் ஆதம், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எல்.எம். லத்தீப், கிழக்கு மாகாண சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தைத் திணைக்கள த்தின் மாகாண ஆணையாளர் எம்.பி. முகம்மது சுப்யான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் அக்கரைப்பற்று நகர சபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த வெதகே, இலங்கை கடற் படை கல்முனை கட்டளை அதிகாரி, நிந்தவூர் பெரிய பள்ளிவாசல் தலைவர் அஷ்-ஷெய்க் மௌலவி எம்.ஐ. ஜௌபர் (பலாஹி), ZABCO நிறுவனத்தின் ஸ்தாபகரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான அல்-ஹாபிஸ் மௌலவி ஏ.ஏ.எம். அக்ரம் (ஷரஃபி) உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சோஷியல் டிவியின் ஆறு ஆண்டுகால பயணத்தையும் சாதனைகளையும் பதிவு செய்யும் "சோஷியல் டிவியின் வெற்றிப் பயணம்" எனும் நினைவு நூல் வெளியிடப்பட்டது.

நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய நிர்வாகத்தினர், குழு உறுப்பினர்கள், செய்தியாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டது டன், 6ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நினைவுக் கேக்கும் வெட்டி கொண்டாடப்பட்டது.

சமூகப் பொறுப்புணர்வை வலியுறுத்தும் வகையில், ஹியூமன் லிங்க் விசேட தேவையுடையோர் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், பரிசுப் பொதிகள் மற்றும் அன்பளிப்புகள் வழங்கப் பட்டன. அதேபோன்று, அல்-அதான் பாடசாலை மாணவர்களுக்கும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேலும், இவ்விரு கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்களும் அவர்களது அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

சமூகப் பொறுப்புணர்வு, ஊடகப் பணியின் அர்ப்பணிப்பு மற்றும் மனிதநேயச் சேவையை பிரதிபலிக்கும் இந்நிகழ்வில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# புதுப் பொழிவு பெற்ற சீனன் கோட்டை "பத்தை" இரத்தினக்கல் வர்த்தக சந்தை



**(பீ.எம். முக்தார்)**

பாரம்பரியமிக்க பேருவலை-சீனன் கோட்டை "பத்தை" இரத்தினக்கல் சந்தை 18.07.2026 முதல் புதுப் பொழிவு பெற்று காலை 9.00 மணி முதல் தினமும் ஆரம்பமாகி பி.ப. 3.00 மணியுடன் நிறைவு பெறும். இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு மிக விமர்சையாகவும், உற்சாகமாகவும் 18ம் திகதி காலை சிலோன் இரத்தினக் கல் மற்றும் ஆபரண (CGJTA) வர்த்தக சங்க தலைவர் அல்ஹாஜ் றிஸ்வான் நயீம் தலைமையில் நடைபெற்றது.

சிலோன் இரத்தினக்கல் மற்றும் ஆபரண (ஊபுதுவுயு) வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த ஆரம்ப நிகழ்வில் களுத்துறை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரும், பேருவலை அபிவிருத்திக் குழுத் தலவருமான சந்திம ஹெட்டியாராச்சி, பிரதம அதிதியாக கலந்துகொண்டார். பேருவலை நகர பிதா மபாஸிம் அஸாஹிர்,முன்னாள் நகரபிதாவும், உறுப்பினருமான அல்ஹாஜ் மஸ ாஹிம் முகம்மத், இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை உயர் அதிகாரிகள், GEM SRI LANKA ஜெம் ஸ்ரீலங்கா கண்காட்சி தலைவர் அல்ஹாஜ் ஹில்மி காஸிம், சீனன் கோட்டைப் பள்ளிச் சங்க இணைச் செயலாளர் களான அல்ஹாஜ் எம்.எம்.எம். சிஹாப், கலீபத்துஷ் ஷாதுலி அல்ஹாஜ் அஸ்சேக் இஹ்ஸானுத்தின் (நளீமி),சிலோன் இரத்தினக்கல் வர்த்தக சங்கத் தலைவர் அல்ஹாஜ் ரிஸ்வான் நயீம்,அல்ஹாஜ் கிஸான் ஹாஷிம்,மூத்த இரத்தினக்கல் வர்த்தகர்களான கலாநிதி அல்ஹாஜ் எம்.நிஸார்,அல்ஹாஜ் எம்.ஜே.எம். ராஸிக்,அல்ஹாஜ் எம்.எஸ்.எம். பாயிஸ்,அல்ஹாஜ் அத்தாவுல்லாஹ் அபூபக்கர், அல்ஹாஜ் முஸ்லிம் சலாஹூத்தீன், சீனன் கோட்டைப் பள்ளிச் சங்க உறுப்பினர்கள்,சிலோன் இரத்தினக்கல் வர்த்தக சங்க உறுப்பினர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வியாபாரிகள் மற்றும் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முன்னைய காலங்களில் தமது முன்னோர்கள் காலை வேளையிலேயே வியாபரத்தை ஆரம்பித்து நன்பகலில் நிறைவடைந்த சீனன் கோட்டை பத்தை இரத்தினக்கல் சந்தை காலப்போக்கில் சில,பல கால மாற்றாங்களினால் ஆரம்பிக்கும் நேரம் என்பது கட்டம் கட்டமாக மாற்ற மடைந்து தற்போது நன்பகலும் பிந்திய ஒரு மணி,2 மணியையும் தாண்டி ஆரம்பித்து இரவு சுமார் 7 மணி வரை நடைபெற்று வந்தது.

இந்நிலைமையானது வியாபாரத்துக்கு ஆரோக்கியமான நிலையல்ல என்றும்,காலை வேளையிலேயே வியாபரங்கள்,தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டால் தான் இறை அருளும், ரஹ்மத்தும. கிடைக்கும் என்ற மார்க்க விழுமியங்களின் அடிப்படை யையும் உணர்ந்த சீனன் கோட்டைப் பள்ளிச் சங்கம்,சிலோன் இரத்தினக்கல், ஆபரண வர்த்தக சங்கம் என்பன இணைந்து இரத்தினக்கல் வர்த்தகர்கள் மற்றும் அது தொடர்பான தொழில் களில் ஈடுபடுபவர்களோடு சில கலந்துரையாடல்கள்,கூட்டங்களை நடாத்தி இதற்கு சிறந்த தீர்வொன்றைப் பெற முயற்சிகள் மேற்கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல்களில் ஆரம்பத்தில் பலரும். ஒவ்வொரு நேரத்தை ஆலோசனையாக வழங்கிய நிலையில் இறுதியில் அணைவரும் ஒன்றிணைந்து காலை 9 மணிக்கு சந்தையை ஆரம்பிக்கவும், பிற்பகல் 3 மணிக்கு நிறைவு செய்யவும் ஆதரவு தெரிவித்த நிலையில் சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன் இன்று அதாவது ஜூலை 18ஆம் திகதி குறித்த நேரத்தில் ஆரம்பிக்கவும், நிறைவு செய்யவும் தீர்மாணம் எடுத்தனர்.

உளளூர்,வெளியூர் மற்றும் வெளிநாட்டு அனைத்து வியாபாரிகளும் சமுகம் தந்து ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு 9 மணிக்கு ஆரம்பித்து வைத்தனர்.

சந்தைக்கு வந்திருந்த இரத்தினக்கல் வர்த்தகர்கள் வியாபரத்தை காலையில் ஆரம்பிக்க எடுத்திருக்கும் தீமாணமானது வியாபாரத்துக்கு மிக ஆரோக்கியமாக இருக்கும் என்றும் அத்துடன் மென்மேலும் இறை அருளும், ரஹ்மத்தும் கிடைக்க வழிவகுக்கும் என்றும் மகிழ்ச்சிகரமாக உரையாடிக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது.

ஆரம்ப நிகழ்வு புனித கிராஅத் மற்றும் தேசிய கீதத்துடன் ஆரம்பிக்கப்பட்டு இனிய ஜலாலா, ஸலவாத்துடன் இனிதே நிறைவுற்றது.

# உமர் பாரூக் மகா வித்தியாலயத்தில் சாதனை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு





**(எம்.யூ.எம்.சனூன்)**

பாடசாலை மட்டத்தில் தெரிவாகி, கோட்ட மட்டப் போட்டிகளில் கொடி கட்டிப் பறந்தும், வலய மட்டப் போட்டிகளில் தமது வல்லமையை வெளிப்படுத்தியும், தற்போது மாகாண மட்டப் போட்டிகளிலும் தங்களது திறமையை உறுதிப்படுத்திய புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் உமர் பாஷரூக் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றிக்கொடி நாட்டும் நோக்குடன் பயணிக்கும் இம்மாணவர்கள், சதுரங்கப் போட்டி, வொலிபோல், தமிழ் மொழித் தினப் போட்டிகள் மற்றும் ஆங்கிலச் செய்தி வாசிப்புப் போட்டி ஆகிய பல்வேறு துறைகளில் சிறப்பான சாதனைகளைப் படைத்துள்ளனர்.

இவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவும், மேலும் பல வெற்றிகளை நோக்கி முன்னேறவும் ஊக்கமளிக்கும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உமர் பாஷரூக் மகா வித்தியாலய அதிபர் எம்.யூ.எம். சாஜஹான் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சாதனை மாணவர்கள் பாராட்டப்பட்டதுடன், ஏனைய மாணவர்களும் ஊக்குவிக்கப்பட்டனர்.

மேலும், கல்விப் பணிமனையின் அலுவலர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களின் சாதனைகளைப் பாராட்டியதுடன், எதிர்காலப் போட்டிகளிலும் வெற்றியீட்ட தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வு மாணவர்களின் திறமைகளை மதிப்பளித்து கௌரவிப்பதோடு மட்டுமல்லாது, பாடசாலையின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கும் சிறப்பான நிகழ்வாக அமைந்தது.

## பிரஜா சக்தி தேசிய வேலைத் திட்டத்தினை வலுவூட்டும் பொருட்டு பிரஜா சக்தி சமூகப் பிரதி நிதிகளுக்கான செயலமர்வு





**இஸட்.ஏ.றஹ்மான்**
**(ஒலுவில் விசேட செய்தியாளர்)**

பிரஜா சக்தி வேலைத் திட்டத்தினை (வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கம்) நாடு முழுவதும் சிறப்பாக வழி நடாத்தும் பொருட்டு கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில் நாட்டின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள சமூக அபிவிருத்தி சபையின் சமுகப் பிரதிநிதிகளுக்கான ஒரு நாள் பயிற்சி நெறி நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலக பிரிவுகளுக்கான பயிற்சி நெறி கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 14 ஆம் திகதி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்றது.

இதில் அதிதியாக பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் கலந்து கொண்டார்.

வளவாளராக சிரேஸ்ட சமுர்த்தி முகாமையாளரும் சிரேஸ்ட வளவாளருமான இஸட். அப்துர் ரஹ்மான் பணியாற்றினார்.இன் நிகழ்வினை சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் (திட்டமிடல்) ஏ.பி.எம். அஸ்ஹர் நெறிப்படுத்தினார்.

## பல்கலை மாணவர்களுக்கு மடி கணனி அன்பளிப்பு






**(அஷ்ரஃப் A Samad)**

ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமாக மடி கணனி வழங்கும் வேலைத்திட்டத்தின் 23ஆம் கட்ட விநியோகம் கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ் செய்திப் பிரிவு பிரதானி சீ.பி.எம்.ஷியாம்,உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத், ஹஸ்மா அழகுக் கலை நிலையத்தின் முகாமைத்துவம் பணிப்பாளர் எம்.என்.எப்.ஹஸ்மா, ரிக்கா டிரேடர்ஸ் உரிமையாளர் ரிகாஸா மஸாஹிர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் தமிழன் பத்திரிகை இணை ஆசிரியர் ஏ.எம்.ஜெளபர், சுயாதீன தொலைக்காட்சி நிறுவன தமிழ் செய்திப் பிரிவு முன்னாள் செய்தி முகாமையாளர் சித்தீக் ஹனீபா, சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேத்தா, அமைப்பின் பணிப்பாளர் மரியம், இணைப்பாளர்களான ஆகிப் மொஹமட் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏ.கார்த்திக்கா-கிளிநொச்சி, என்.ஆர்.நுஹா-மாவத்தகம, சீ.எச்.எப்.பிக்ரா -மல்வானை,எம்.எஸ்.எப்.ரிமாஸா- கொச்சிக்கடை மற்றும் எஃப். எம்.பஸ்லான்- அநுராதபுரம் ஆகியோருக்கு புரவலர் ஹாஷிம் உமருடன் இணைந்து நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு அதிதிகள் மடி கணனிகளை வழங்கி வைத்தனர்.

இந்நிலையில் ஹாஷிம் உமர் பௌண்டேசனின் நலிந்த ஊடகவியலாளர்களுக்கு கரம் கொடுக்கும் திட்டத்தின் கீழ் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.சத்தாருக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## லேக் ஹவுஸ் ஊழியர்களுக்கு இலவசமாக முழு உடற்பரிசோதனை மெடிகல் சேவை





**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

லேக் ஹவுஸ் இன்டர் யூனியன் எம்லோயர் கிளையும் சுகாதார அமைச்சும் இணைந்து லேக் ஹவுஸ் ஊழியர்களுக்கு இலவசமாக முழு உடற்பரிசோதனை மெடிகல் சேவை ஒற்றை இன்று வழங்கியது.

இரத்தப் பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை, கண் பரிசேதனை , ஈசிஜி உள்ளிட்ட முழு உடற்கூற்று பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

கொழும்பு வைத்தியசாலை மற்றும் கொழும்பு மாநகர வைத்தியசாலைகளின் விசேட வைத்தியர்கள், தாதியர்கள், மருந்து கலவையாளர்கள், வைத்திய உதவியாளர்கள் கலந்து கொண்டு இந்த மருத்துவ பரிசோதனை சேவையை வழங்கினர்.

## திவி மகா தாது சுயசரிதை நூல் வெளியீடு



**(பேருவலை பீ.எம்.முக்தார்)**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையில் நீண்ட காலம் பணியாற்றிய பொறியாளர் ஜெரார்ட் பெர்னாண்டோவின் ‘திவி மகா தாது’ என்ற தலைப்பிலான சுயசரிதை, ரத்மலானாவில் உள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை பயிற்சி மையத்தின் கேட்போர் கூடத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக, பாதுகாப்பு அமைச்சகத்தின் முன்னாள் செயலாளரும், நீர் வழங்கல் சபையின் முன்னாள் தலைவருமான பொறியாளர் கருணசேன ஹெட்டியாராச்சி கலந்துகொண்டார். மேலும் பல சிறப்பு விருந்தினர்களும் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.


# கடற்படை தளபதி பிரதமரை உத்தியோகபூர்வமாக சந்தித்தார்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)



இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோ, உத்தியோக பூர்வ சந்திப்பொன்றிற்காக கடந்த 16ஆம் திகதி வியாழக் கிழமை பிரதமர் அலுவலகத்தில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கௌரவ பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய அவர்களை சந்தித்தார்.
பாரம்பரியமிக்க இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் போது, இலங்கை கடற்படை யின் 27 வது கடற்படை தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மைக்காக கௌரவ பிரதமர் அவர்கள், கடற்படை தளபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, தேசிய பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இலங்கை கடற்படை ஆற்றும் தனித்துவ மான பங்களிப்பு குறித்து இரு தரப்பினருக்கும் இடையே சுமூகமான மற்றும் பயனுள்ள கருத்துப் பரிமாற்றமும் இடம்பெற்றது.
மேலும், இந்த உத்தியோகபூர்வ சந்திப்பைக் குறிக்கும் வகையில், கடற்படை தளபதியினால் கௌரவ பிரதமர் அவர்களுக்கு நினைவுப் பரிசு ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

## கத்தார் முன்னாள் ஆட்சியாளருக்கு இலங்கை அமேசன் கல்லூரி மற்றும் கேம்பஸ் நிறுவனர் அஞ்சலி





கத்தார் நாட்டின் முன்னாள் ஆட்சியாளரும், "தந்தை அமீர்" எனப் போற்றப்பட்டவருமான ஷேக் ஹமத் பின் கலீஃபா அல் தானி அவர்களின் மறைவை முன்னிட்டு, கொழும்பிலுள்ள கத்தார் தூதரகத்தில் வைக்கப் பட்டிருந்த இரங்கல் பதிவேட்டில் அமேசான் காலேஜ் மற்றும் கேம்பஸ் நிறுவனர் இல்ஹாம் மரைக்கார் கையொப்பமிட்டு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.
அவரது மறைவு கத்தார் மக்களுக்கு மட்டுமன்றி, அவரை மதித்திருந்த பல்வேறு நாடுகளின் மக்களுக்கும் பெரும் இழப்பாகும் என அஞ்சலி செலுத்தியவர்கள் தெரிவித்தனர்.
ஷேக் ஹமத் பின் கலீஃபா அல் தானி அவர்கள் கத்தாரின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் மனிதநேயப் பணிகளில் முக்கிய பங்காற்றிய தலைவராக நினைவுகூரப்பட்டார்.
இந்த நிகழ்வில், அகில இலங்கை வாலிபர் முன்னணிகளின் சம்மேளனத்தின் தேசிய தலைவர் ஷாம் நவாஸ் மற்றும் சர்வ மத அமைப்பின் பிரதிநிதி மவுலவி முஜீப் ஆகியோரும் கலந்து கொண்டு இரங்கல் பதிவேட்டில் கையொப்பமிட்டமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் மாநகர சபையின் டிஜிட்டல் கட்டண முறைமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பு



(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் மாநகர சபையின் டிஜிட்டல் கட்டண முறைமை வியாழக்கிழமை (16) உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.
புத்தளம் மாநகர முதல்வர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மதின் அழைப்பின் பேரில், வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, இப்புதிய டிஜிட்டல் கட்டண முறைமையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.
பொது மக்களுக்கான மாநகர சபையின் சேவைகளை மேலும் இலகுவாகவும், விரைவாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் வழங்கும் நோக்கில் இம் முறைமை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

## ரேத்தகொட வீதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

(மாத்தளை எம் . சதூர்தீன்)





வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் அரசாங்கத்தின் கொள்கை பிரகனத்திற்கு அமைய 800 கிராமிய பாலங்கள் நாடளாவிய ரீதியில் நிர்மாணிக்கும் வேலை திட்டத்தின் கீழ் மாவத்தகம ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில் 3கோடி 47 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக் கப்படவுள்ள ரேத்தத்கொட வீதி பாலத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா 14நேற்று முன் தினம் இடம் பெற்றது இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பொது நிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேயரத்ன இதற்கான அடிக்கல்லை நட்டி வைப்பதையும் தேசிய மக்கள் சக்தி குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.எம்.அஸ்லம் சார்பில் அவரது பாராளுமன்ற அலுவலக செயலாளர் அப்துல்லா உட்பட ரிதிகம பிரதேச சபை தலைவர் அரச உத்தியோகத்தர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கல்முனை கல்வி மாவட்ட கணித ஆய்வுகூடம் அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் திறந்து வைப்பு

(நூருல் ஹுதா உமர்)





கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியால யத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு ள்ள கல்முனை கல்வி மாவட்ட கணித ஆய்வுகூடம் 17 ஆம் திகதி காலை பாடசாலை வளாகத்தில் சிறப்பாக திறந்து வைக்கப்பட்டது.
பாடசாலை உதவி அதிபர் எம். எச்.ஐ. இஸ்ஸத் அவர்களின் நெறிப்படுத்தலிலும், அதிபர் எஸ். எம்.எஸ். ரிஸ்ஸானா அவர்களின் தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கணித ஆய்வு கூடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.
கௌரவ அதிதிகளாக கல்முனை கல்வி வலயத்தின் ஸ்தாபன மற்றும் பொது நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் அவர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளரும் காரைதீவு பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ. சஞ்சீவன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.
விசேட அதிதிகளாக ஆசிரிய ஆலோசகர் தலில் அபூபக்கர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை கல்முனை பொறியியலாளர் இசட்.ஏ. அஸ்மீர், அல்-மீஸான் பௌண்டேஷன் தவிசாளர் நூருல் ஹுதா உமர் மற்றும் கல்முனை கல்வி மாவட்டத்தின் பல பாடசாலைகளைச் சேர்ந்த கணிதப் பாட ஆசிரியர்கள் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.
மாணவர்களின் கணிதக் கற்றலை செயன்முறை மற்றும் அனுபவ அடிப்படையிலானதாக மாற்றுவதற்காக நிறுவப்பட்டுள்ள இந்த ஆய்வுகூடம், கணிதக் கருத்துக்களை எளிதாக விளங்கிக் கொள்ளவும், மாணவர்களின் பகுத்தறிவு, தர்க்க சிந்தனை மற்றும் பிரச்சினைத் தீர்க்கும் திறன்களை மேம்படுத்தவும் உதவும் என நிகழ்வில் அதிதிகளினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.
பிரதி அதிபர், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
கல்வித் துறையில் புதுமையான கற்றல் வளங்களை அறிமுகப்படுத்தும் முயற்சியின் ஒரு முக்கிய கட்டமாக இக்கணித ஆய்வுகூடம் அமைந்துள்ளதாகவும், எதிர் காலத்தில் மாணவர்களின் கல்வி அடைவுகளை மேம்படுத்துவதில் இது முக்கிய பங்காற்றும் எனவும் நிகழ்வில் வலியுறுத்தப் பட்டது.

# கிழக்கு ஆளுநர் – ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட பிரதிநிதிகள் சந்திப்பு





**(ஏ.எச்.எம்.ஹஸ்பர்)**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட (UNDP) பிரதிநிதிகள் குழுவிற்கும், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர அவர்களுக்கும் இடையே, திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் (15) ஒரு சிறப்பு கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கையின் சுகாதாரத் துறையில் மருத்துவக் கழிவுகளின் முகாமைத்துவத்தை சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான முறையில் வலுப்படுத்துவதற்கான திட்டத்தை உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) மற்றும் UNDP ஆகியவை இணைந்து செயற்படுத்தின.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் மருத்துவக் கழிவுகளைப் பாதுகாப்பாகச் சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் ஆகியவற்றுக்கான நவீன முறைகளை அறிமுகப்படுத்துதல், எண்ணிம மேலாண்மை அமைப்புகளைப் பயன்படுத்துதல், நிறுவனத் திறன் மேம்பாடு மற்றும் மாகாண அளவில் ஒரு மையப்படுத்தப்பட்ட மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு மையத்தை நிறுவுதல் ஆகியவை குறித்துக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்தத் திட்டத்தின் மூலம், பொது சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கவும், சர்வதேசத் தரங்களுக்கு இணங்க கிழக்கு மாகாணத்தில் உள்ள சுகாதார நிறுவனங்களில் மருத்துவக் கழிவு மேலாண்மையை வலுப்படுத்தவும் தேவையான ஆதரவை வழங்குவதில் UNDP பிரதிநிதிகள் குழு தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியது.

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 18ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா: 3,398 மாணவர்களுக்குப் பட்டங்கள்




**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 18ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் ஒலுவிலிலுள்ள பல்கலைக்கழகத்தின் ஏ.ஆர். மன்சூர் ஞாபகார்த்த பிரதான கேட்போர் கூடத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

மூன்று நாட்களுக்கு ஒன்பது தனித்தனி அமர்வுகளாக (Sessions) நடைபெறவுள்ள இவ்விழாவில், பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த உள்வாரி மாணவர்கள் மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள் உட்பட மொத்தமாக 3,398 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க 18ஆவது பட்டமளிப்பு விழா, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன் தலைமையில், வேந்தர் கலாநிதி பாயிஸ் முஸ்தபா (PC) முன்னிலையில் நடைபெறவுள்ளதுடன், விழாவின் நிர்வாக ஒருங்கிணைப்புப் பணிகளை பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் மேற்கொண்டு வருகிறார்.

பட்டமளிப்பு விழாவின் ஆரம்ப அமர்வில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் பீட பட்டதாரிகளுக்கான பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இந்நாளின் விசேட அம்சமாக மத்திய மாகாண ஆளுநரும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தருமான பேராசிரியர் சரத் அபேயகோன் பட்டமளிப்பு விசேட உரையை ஆற்றவுள்ளார்.

அமர்வுகளின் விபரங்கள்:

முதல் நாள் (ஜூலை 25): 1ஆம் அமர்வு: பொறியியல் பீடம் (2018ஃ2019 மற்றும் 2019ஃ2020 கல்வியாண்டுகள்) மற்றும் தொழில் நுட்பப் பீடம்.

2ஆம், 3ஆம் அமர்வுகள்: இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீடத்தின் இரண்டு கல்வியாண்டுகளைச் சேர்ந்த பட்டதாரிகள்.

இரண்டாம் நாள் (ஜூலை 26): 4ஆம் அமர்வு: பிரயோக விஞ்ஞான பீடத்தின் இரண்டு கல்வியாண்டுகளைச் சேர்ந்த பட்டதாரிகள்.

5ஆம், 6ஆம் அமர்வுகள்: கலை மற்றும் கலாசார பீட மாணவர்கள்.

இறுதி நாள் (ஜூலை 27): 7ஆம், 8ஆம் அமர்வுகள்: முகாமைத்துவ மற்றும் வர்த்தகப் பீடத்தின் பட்டதாரிகள்.

9ஆம் அமர்வு: கலை மற்றும் கலாசாரப் பீடம், முகாமைத்துவ மற்றும் வர்த்தகப் பீடம் ஆகியவற்றின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள்.

இம்முறை பொறியியல், தொழில்நுட்பவியல், இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபுமொழி, பிரயோக விஞ்ஞானம், கலை மற்றும் கலாசாரம், முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் ஆகிய பீடங்களைச் சேர்ந்த பெருமளவிலான மாணவர்கள் ஒரே தடவையில் பட்டம் பெறுவது, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி வளர்ச்சியையும் உயர்கல்வித் துறைக்கான அதன் பெரும் பங்களிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் பட்டதாரிகள் தங்களுக்கான பட்டமளிப்பு அங்கி (Convocation Cloak), மாலை, அனுமதிச்சீட்டு மற்றும் தொடர்புடைய பொருட்களை ஜூலை 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை தங்களது பீடங்களில் நேரில் சென்று பெற்றுக்கொள்ள முடியும்.

பட்டமளிப்பு அங்கி மற்றும் மாலையைப் பெற்றுக்கொள்ளும் போது, மாணவர்கள் தங்களது மாணவர் பதிவேடு (Student Record) அல்லது மாணவர் அடையாள அட்டையுடன் (ID), முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட அறிவிப்புப் படிவத்தையும் (Clearance Form) சமர்ப்பிக்க வேண்டும். உரிய அடையாள ஆவணங்கள் மற்றும் படிவங்கள் இன்றி எவருக்கும் பட்டமளிப்பு பொருட்கள் வழங்கப்படமாட்டாது என பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் மேலும் அறிவித்துள்ளார்.

## அல் அஷ்ர:.ப் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவுக்கு புதிய நூலகம் கையளிப்பு





**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

வத்தளை மாபோலவில் அமைந்துள்ள WP/KE/அல் அஷ்ரஃப் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக அமைக்கப்பட்ட புதிய நூலகம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.


தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் வழங்கும் சமூகப் பணியியல் பட்டப்படிப்பின் களப்பயிற்சியின் ஒரு பகுதியாக, இறுதியாண்டு மாணவி செல்வி அகீலா நவ்ஷாத் இத்திட்டத்தை முன்னெடுத்தார்.

சமூகத் தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட இத்திட்டத்திற்கு பாடசாலை நிர்வாகம், சமூக நலன்விரும்பிகள், நன்கொடையாளர்கள் மற்றும் World Vision Lanka நிறுவனத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்தது.

புதிய நூலகத்தில் மாணவர்களுக்கேற்ற நூல்கள், கற்றல் வளங்கள் மற்றும் நூலக உபகரணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இது மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தையும் கல்வி வளர்ச்சியையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.

நூலகக் கையளிப்பு நிகழ்வில், வத்தளை பிரதேச செயலாளர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மேலும், உதவி திட்டமிடல் பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 176யு மாபோல கிராம நிலதாரி, World Vision Lanka நிறுவனத்தின் முகாமையாளர்பிரசங்க பெர்னாண்டோ, பிராந்திய நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் சமில வெலிகன்ன, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், சமூக பிரதிநிதிகள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண சேர். ஜோன் டார்பெட் கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி கல்முனை ஸாஹிறா மாணவர்கள் தேசிய மட்டத்திற்குத் தெரிவு













**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தினால் நாடுபூராக நடைபெறும் Sir John Tarbat கனிஷ்ட மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியின் கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தை உள்ளடக்கிய 2026 ஆம் ஆண்டுக்கான சுற்றுப் போட்டிகள் (11) மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

14 வயதுக்குட்பட்ட ஆண்கள் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மாணவன் எம்.ஜே. ஹூஸ்னி முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் , 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் பாடசாலை அணி முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், 12 வயதுக்குட்பட்ட ஆண்கள் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மாணவன் எப். அஹமட் ஹஸி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், 12 வயதுக்குட்பட்ட ஆண்கள் 4x50 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் பாடசாலை அணி மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும், எம்.ஏ.எம். அதீப், ஏ.அதீஸ் ஆகியோர் பங்குபற்றிய போட்டிகளில் திறமைச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

இச்சாதனைக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி, ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபிர் (SLEAS) அவர்களுக்கும் மற்றும் பிரதி அதிபர்கள், மாணவனை பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், இப் போட்டியில் பங்குபற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர், போட்டிகளில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.



அரபாத் பஹுர்தீன்




# ஐசிசி எடுத்துள்ள அதிரடி முடிவுகள் உலக கிரிக்கெட்டில் இணையும் மொரிஷியஸ்

எடின்பர்கில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) ஆண்டு கூட்டங்களின் பின்னர் பல முக்கிய நிர்வாக மற்றும் உறுப்பினர் தொடர்பான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில், மொரிஷியஸ் கிரிக்கெட் அமைப்பு ஐசிசி யின் 111வது உறுப்பினராக அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டிற்கு 12.82 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்குவதற்கும் ஐசிசி ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள கிரிக்கெட் கனடா அமைப்பு மீண்டும் உறுப்பினர் அந்தஸ்தைப் பெற வேண்டிய நிபந்தனை களையும் ஐசிசி நிர்ணயித்துள்ளது.

ஐசிசி உறுப்பினர் விதிமுறைகளை மீறியுள்ளதாக கண்டறியப்பட்டதால், பிரான்ஸ் கிரிக்கெட் அமைப்பை ஐசிசி "எச்சரிக்கை நிலையில்" வைத்துள்ளது. இருப்பினும், தற்போது கூடுதல் தண்டனை அல்லது இடைநீக்கம் போன்ற நடவடிக்கை கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இலங்கை கிரிக்கெட் (SLC) புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐசிசி பாராட்டியுள்ளது. எனினும், புதிய தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மேலும், அடுத்த அறிவிப்பு வரும் வரை இலங்கை கிரிக்கெட் பிரதிநிதிகள் ஐசிசி நிர்வாக சபைக் கூட்டங்களில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, ஜூன் மாதத்தில் நடைபெற்ற ஐசிசி காலாண்டுக் கூட்டத்திற்கும் SLC பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை.

கடந்த மே மாதம் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நிர்வாக மாற்றங்களின் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எல்.சி நிர்வாக சபை நீக்கப்பட்டு, இலங்கை கிரிக்கெட்டை மறுசீரமைக்கும் நோக்கில் 'Transformation Committee' நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஐசிசி தனது நிர்வாக அமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இரண்டு புதிய துணைக் குழுக்களை அமைத்துள்ளது.

Governance Review Committee

இந்த குழுவுக்கு பிசிசிஐ செயலாளர் தேவஜித் சைகியா தலைமை வகிக்கிறார். இவருடன் ஊளுயு துணைத் தலைவர் மொஹம்மத் மூசாஜி மற்றும் ஐசிசி சுயாதீன இயக்குநர் டாக்டர் ரோஸ் ரிவாஸ் ஆகியோர் இணைந்துள்ளனர்.

ஃபிராஞ்சைஸ் லீக் குழு–

உலகம் முழுவதும் வளர்ந்து வரும் ஃபிராஞ்சைஸ் லீக் போட்டிகளை கண்காணிக்கும் இந்தக் குழுவில், பிசிபி தலைவர் தமீம் இக்பால், நமீபியா கிரிக்கெட்டின் ருடி வான் வூரன், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியத்தின் ரிச்சர்ட் கோல்ட், கிரிக்கெட் ஆஸ்திரேலியா வின் டாட் கிரீன்பெர்க் மற்றும் தேவஜித் சைகியா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஐசிசி உறுப்பினர் பொறுப்புகளை கடுமையாக மீறியதாகக் கூறி, கடந்த ஜூன் மாதம் கிரிக்கெட் கனடா இடைநீக்கம் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, அமைப்பு விரிவான செயல் திட்டத்தை ஐசிசிக்கு சமர்ப்பித்திருந்தது. தற்போது, அந்த இடைநீக்கத்தை நீக்குவதற்கான குறிப்பிட்ட நிபந்தனைகளை ஐசிசி அறிவித்துள்ளது. அவை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே கிரிக்கெட் கனடாவின் உறுப்பினர் அந்தஸ்து மீண்டும் வழங்கப்படும்.

ஐசிசி யின் இந்த முடிவுகள் உலக கிரிக்கெட்டின் நிர்வாகம், வெளிப்படைத் தன்மை மற்றும் உறுப்பினர் அமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாக பார்க்கப்படுகின்றன.

# சர் கார்பீல்ட் சோபர்ஸின் மறைவுக்கு இலங்கை கிரிக்கெட் சபை இரங்கல்




கிரிக்கெட் விளையாட்டின் என்றும் அழியாத நட்சத்திரமாக விளங்கிய சர் கார்பீல்ட் சோபர்ஸ் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், 18ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறும் எல்.பி.எல் போட்டி தொடங்குவதற்கு முன்பு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்த இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

மேலும், அவருக்கு கௌரவம் அளிக்கும் விதமாக இன்றைய போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து அணிகளின் வீரர்களும் கருப்பு நிற கைப்பட்டை அணிந்து விளையாட உள்ளனர்.

சர் கார்பீல்ட் சோபர்ஸ் அவர்களின் மறைவுக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது, "சர் கேரி சோபர்ஸ் இலங்கை கிரிக்கெட்டுடன் மிகவும் சிறப்பான மற்றும் நீண்டகால தொடர்பைக் கொண்டிருந்த ஒரு மாபெரும் ஆளுமையாவார்.

குறிப்பாக, 1980களின் முற்பகுதியில் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராகப் பணியாற்றிய அவர், 1983 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரிலும் இலங்கை அணிக்கு வழிகாட்டியாக இருந்தார் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோபர்ஸ் அவர்களின் குடும்பத்தினருக்கு தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம், உலக கிரிக்கெட் விளையாட்டுக்காக அவர் விட்டுச் சென்றுள்ள அசாத்தியமான மரபு, பல தலைமுறை வீரர்களைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# பீலேயின் ஜெர்சி 47 கோடிக்கு விற்பனை



1958ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்து இறுதிப் போட்டியில் பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலே அணிந்து விளையாடிய ஜெர்சி நியூயோர்க்கில் நடைபெற்ற ஏலத்தில், 49 இலட்சம் அமெரிக்க டொலருக்கு சுமார் 47.18 கோடி ரூபாவிற்கு விற்பனையாகியுள்ளது.

1958 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் பிரேசில் அணி 5-2 என்ற கோல் கணக்கில் ஸ்வீடனை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ள நிலையில், பீலே 2 கோல்களை அடித்து அசத்தியுள்ளார்.

கால்பந்து வீரர் ஒருவரின் ஜெர்சி ஏலம் போன வரிசையில் இது உலகளவில் 2ஆவது அதிகபட்ச விலையாகும். முன்னதாக 2022-ல் ஆர்ஜென்டினா ஜாம்பவான் டீகோ மரடோனாவின் ஜெர்சி 93 இலட்சம் டொலருக்கு ஏலம் போனதே முதலிடத்தில் உள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஜெர்சி பீலே தன் நண்பரும் சக வீரருமான, டிடாவுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். டிடாவின் குடும்பத்தினர் இதனைப் பிரேசில் அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்ட நிலையில், தற்போது 'சோத்பி' நிறுவனம் மூலம் இது ஏலம் விடப்பட்டுள்ளது.

# அகில இலங்கை உதைபந்தாட்ட 20 வயதின் கீழ் போட்டியில் கிண்ணியா அல் அமீன் சம்பியன்



(எம்.ஏ.முகமட்)

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பட்ட அகில இலங்கை உதைபந்தாட்ட 20 வயதின் கீழ் டிவிசன் 2 போட்டியில் கிண்ணியா அல் அமீன் மகா வித்தியாலய அணி சம்பியனாக தெரிவாகியது.

கொழும்பு சென்ட் பீட்டர்ஸ் கல்லூரி மைதானத்தில் (12) இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கிண்ணியா அல் அமீன் மகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு டி மெசனட் கல்லூரி ஆகிய அணிகள் பங்கு பற்றியிருந்தன.

இப்போட்டியில் கொழும்பு டி மெசனட் கல்லூரி அணியை தோல்வியுறச் செய்து 2-1என்ற கோல் கணக்கில் அல் அமீன் மகா வித்தியாலய அணி வெற்றியை தனதாக்கி சம்பியனாக தெரிவு செய்யப் பட்டது.

இப்போட்டியில் சிறந்த வீரராக எம். மனாஸ் மற்றும் சிறந்த கோல் காப்பாளராக ஏ.எம்.அபாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது